

# பாவங்களால் பாழாகும் உலக வாழ்க்கை

ஹள்ரத் மௌலானா
பீர் துல்ஃபிகார் அஹ்மது ஸாஹிப்
தாமத் பரகாதுஹும்

# பாவங்களால்
## பாழாகும்
# உலக வாழ்க்கை

DARUL
MARASHID

Title:
பாவங்களால் பாழாகும்
உலக வாழ்கை
Paavangalaal Paazhaagum Ulaga Vazhkai
(Translated In Tamil)

Original:
دنیا میں گناہوں کے اثرات

Translation:
Moulavi
Abdun Nafi Qasimi
(Chennai)

Published by:
Darul Marashid
Deen Estate,
No. 85, (Old No. 42,) Moore Street,
Cheenai - 600 001
# +91-44-4216 1622
#+91-98405 33697

Printing
SKS Printers
+91-95519 44709

Hadiya: ₹20/-

# உள்ளே...

1 பயனுள்ள கல்வியை விட்டும் தடுக்கப்படுதல் 1
2 மனன ஆற்றலில் குறைவு ஏற்படுதல் 4
3 சம்பாத்தியத்தில் நெருக்கடி 5
4 அல்லாஹ்வை விட்டும் தூரமாகுதல் 8
5 மனிதர்களின் மீது வெறுப்பு 9
6 வேலைகளில் தடை ஏற்படுதல் 10
7 உள்ளத்தில் தாக்கம் ஏற்படுவதில்லை 12
8 உடலும் இன்னும் உள்ளத்திலும் பலகீனம் 15
9 வணக்க வழிபாட்டில் தடை 15
10 தொடர்ந்து பாவங்கள் செய்தல் 19
11 தவ்பா செய்யும் பாக்கியமே கிடைப்பதில்லை 19
12 பாவத்தை ஒரு பொருட்டாகவே கருதாமலிருப்பது 20
13 பாவிகளின் வாரிசாக ஆகுதல் 21
14 அல்லாஹ்விடத்தில் அவமானம் 22
15 அறிவில் குறைவு 26
16 சாபத்திற்குரியவனாக ஆகுதல் 27
17 மலக்குகளின் துஆவை விட்டும் தடுக்கப்படுதல் 33
18 விளைச்சலில் குறைவு 33
19 வெட்கம், மானம் நீங்கிவிடுதல் 35
20 அல்லாஹ்வின் கண்ணியம் நீங்குதல் 36
21 பிரச்சனைகள் சூழ்ந்து விடுதல் 36
22 கெட்ட பெயர்கள் இடப்படும் 37
23 ஷைத்தானை சாட்டப்படும் 38
24 மன நிம்மதி சென்றுவிடும் 38
25 பெரும் பாவங்களை தொடர்ந்து செய்தல் 39
26 கலிமா சொல்வதை விட்டும் தடுக்கப்படுதல் 39

# மதிப்புரை

அல்லாஹ்வின் கிருபையால், சர்வதேச அளவில் மாபெரும் சீர்திருத்தப் பணி செய்து வரும் பெரியார்களில் ஹள்ரத் மௌலானா பீர் துல்பிகார் அஹ்மத் சாஹிப் தாமத் பரகாதுஹும் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர்கள்.

பாவத்தின் காரணத்தால் துன்பத்தில் துவண்ட மனிதர்கள், ஹள்ரத் அவர்களின் சொற்பொழிவால் தனக்குள் சீர்திருத்தத்தை ஏற்படுத்தி இன்பமான, தூய்மையான வாழ்கையை மேற்கொண்டவர்கள் ஏராளம்.

பொதுமக்கள் மட்டும் இன்றி உலமாக்கள் மற்றும் சாலிஹீன்கள் என அனைத்து தரப்பினரும் ஹள்ரத் அவர்கள் மூலம் பயனடைந்துள்ளனர்.

அந்த அடிப்படையில் பாவங்களால் பாழாகும் உலக வாழ்கை என்ற தலைப்பில் ஹள்ரத் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவை மௌலவி அப்துன் நாஃபி அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்கள். இதை நூல் வடிவில் தொகுத்து வெளியிட வேண்டுமென்ற பலரின் விருப்பத்தின்படி தொகுத்து தரப்படுகின்றது.

(மௌலானா)

ஷகீல் அஹ்மது நக்ஷ்பந்தி

பெங்களூரி

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

பாவங்கள் அனைத்தும் தன்னுள் தன் பின் விளைவுகளை கொண்டுள்ளன. எவ்வளவுதான் வெற்றிகரமாக யாருடைய தலையீடும், குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக ஒரு பாவம் செய்தாலும் அல்லாஹ் அதன் தண்டனையை கொடுத்தே தீருவான்.

• எத்தனையோ செல்வந்தர்கள் விரும்பியதை உண்கின்றனர்.

• விரும்பிய வசதிகளுடன் படுக்கின்றனர்.

• ஆனாலும் அவர்கள் ஏன் தூக்கமாத்திரை சாப்பிடும் இழிநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்?

தமது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சந்தோஷமும் மன அமைதியும் கிடைத்து விடுமென்றால் இவர்கள்தான் உலகிலேயே பெரும் பாக்கியசாலிகளாக இருந்திருப்பார்கள். மாறாக, இவர்களே கஷ்டத்திலும், மன அழுத்தத்திலும் சிக்குண்டவர்களாக இருக்கிறார்கள். இதிலிருந்து பாவத்தின் பாதிப்புகளை நாம் விளங்கிக் கொள்ளலாம். பாவம் செய்பவர் அதன் பாதிப்பிலிருந்து தப்பவே முடியாது. பாவமும் அதன் பாதிப்புகளும் (நெருப்பையும் அதன் உஷ்ணத்தையும் போன்று) பிரிக்க முடியாதது.

## பாவத்தின் பாதிப்புகள்

எங்கு பாவம் நடைபெறுமோ அங்கு அதன் தீய பாதிப்புகளும் நிச்சயம் ஏற்பட்டே தீரும். அதில் சிலவற்றை நாம் வெளிப்படையாகவே காணலாம். இதைப் பற்றி ஹஜ்ரத் அக்தஸ் தானவி (ரஹ்) அவர்கள் தன்னுடைய جزاء الاعمال (செயல்களின் கூலி) என்ற நூலில் மிக விரிவாக எழுதியுள்ளார்கள். அதை அடிப்படையாக வைத்து ஒவ்வொன்றாக பார்ப்போம்.

### 1. பயனுள்ள கல்வியை விட்டும் தடுக்கப்படுதல்

பாவத்தினால் மனிதன் பயன்தரும் கல்வியை விட்டும் தடுக்கப்படுகிறான். ஒன்று (علم) கல்வி; மற்றது (معلومات) தகவல்கள். கல்வி மற்றும் தகவல்களுக்கு

மத்தியில் வித்தியாசம் உள்ளது. தகவல்களை அனைவரும் பெற்றிருக்கின்றனர். அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் காஃபிர்களாக இருந்தாலும் சரியே!

• எத்தனையோ (கிருஸ்துவ, யூத) பாதிரிகள் நாமே ஆச்சரியப்படுமளவு இஸ்லாத்தைப் பற்றி அதிகமாகவே அறிந்து வைத்துள்ளனர்.

• அரபியில் சரளமாக பேசும் பல பாதிரிகளும் உண்டு.

• நாம் குர்ஆனை ஓத ஓத அவர்கள் தர்ஜமா செய்து விடுவார்கள்.

ஆனாலும் இவர்களிடமிருப்பது இஸ்லாத்தின் தகவல்கள் மட்டுமே. கல்வி கிடையாது.

Marmaduke Pickthall என்பவர் குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது அவர் இஸ்லாத்தை ஏற்றிருக்க வில்லை. தனக்கும் இஸ்லாமிய அறிவு இருப்பதாக குர்ஆனை மொழி பெயர்த்தார். ஆனால் குர்ஆனுடைய அதிசயம், அல்லாஹ் அவருக்கு நேர்வழியை கொடுத்துவிட்டான். ஆக, தகவல்கள் என்பது காஃபிர்களிடமும் இருக்கும். அப்படியானால் கல்வி மற்றும் தகவல்களுக்கு மத்தியில் உள்ள வித்தியாசம்தான் என்ன?

ஒரு முறை ஹள்ரத் முஃப்தி ஷஃபி (ரஹ்)அவர்கள் தமது மாணவர்களிடம் ''கல்வி என்றால் என்ன?'' என்று கேட்க, 'அறிதல்' என்றும் 'விளங்குதல்' என்றும் பலரும் பலவாறாக பதிலளித்தார்கள். ஹள்ரத் எதுவும் கூறாமல் அமைதியாக இருந்தார்கள். பல்வேறு பதில்களுக்குப்பின், மாணவர்கள் அமைதியான போது ஒரு மாணவர், ''ஹள்ரத்! தாங்களே கூறுங்களேன்'' என்றார். அதற்கு ஹள்ரத் அவர்கள் ''இல்ம் என்பது ஒரு ஒளியாகும். அதை அடைந்தவருக்கு அதன் படி அமல் செய்யாதவரை நிம்மதியே ஏற்படாது. இந்த நிலை இருந்தால்தான் அது இல்ம். இல்லையெனில் அது தகவல்கள் மட்டுமே'' என்றார்கள்.

மேற்கூறியதே பயனுள்ள கல்வி. எந்த கல்வி அவனுக்கு பயனளிக்க வில்லையோ - كَمَثَلِ الْحِمَارِ يَحْمِلُ اَسْفَارًا என்று குர்ஆனில் கூறப்பட்டதைப் போல், ''புத்தகங்களைச் சுமக்கும் கழுதையைப் போன்றதாகும்'' - இதனால் தான் கல்வி இருந்தும் பலர் வழி கேட்டில் சென்று விடுகின்றனர். பார்ப்பதற்கு கல்வி இருப்பதைப் போன்று தான் தெரியும். ஆனால் அது வெறுமனே தகவல்கள்தான். இதைப் பற்றியே அல்லாஹ் குர்ஆனில்

اَفَرَءَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَهٗ هَوٰىهُ وَاَضَلَّهُ اللّٰهُ عَلٰى عِلْمٍ

*(நபியே) தன் மனோ இச்சையை தன்னுடைய தெய்வமாக ஆக்கிக் கொண்டவனை நீர் பார்த்தீரா? இன்னும், (அவன்) அறிந்திருந்தும் அல்லாஹ் அவனை வழி கெடுத்துவிட்டான். (45:23)* என்று கூறுகிறான்.

கல்வி இருந்தும் வழிகேட்டில் இருப்பதற்கு ஒரு உதாரணம் புகை பிடிப்பது உடலுக்கு கேடு. புகைக்கு அடிமையான எத்தனையோ நபர்கள் சிறுவர்களைப் பார்த்து ''நாங்கள் தான் இந்த புகை பழக்கத்தில் சிக்கி வாழ்வை கெடுத்துக் கொண்டோம். நீங்களாவது இந்த தீய பழக்கத்தில் ஈடுபடாதீர்கள்'' என்று உபதேசிக்கின்றனர்.

சிகரெட்டை தயாரிப்பவர்களும் அந்த சிகரெட் டப்பாவில் ''சிகரெட் உடலுக்கு தீங்கு'' என்று எழுதியிருப்பார்கள். ஆக சிகரெட் பிடிப்பவர்களுக்கும் அதை தயாரிப்பவர்களுக்கும் அது ''தீங்கு விளைவிக்கும்'' என்பது தெரியும். அப்படியிருந்தும் அந்த 'அறியுதல்' (இல்ம்) அவர்களுக்கு பலனளிப்பதில்லை.ஆக, பாவங்களின் காரணமாக மனிதன் பயனுள்ள கல்வியை விட்டும் தடுக்கப்படுகிறான். வெறுமனே 'அறியுதல்' (மஃலூமாத்) மட்டுமே அவனிடம் இருந்துவிடுகிறது. சிலர் ''நான் முதலில் கல்வியை முழுமையாக கற்று, பின்பு மொத்தமாக அமல் செய்வேன்'' என்று கூறுவதுண்டு. இது ஷைத்தானின் வழிகேடேயாகும்.

## 2. மனன ஆற்றலில் குறைவு ஏற்படுதல்

இமாம் ஷாஃபியி (ரஹ்) தன் ஆசிரியர் வகீஃ என்பவரிடம் தனது மனன ஆற்றலின் குறைவை முறையிட்ட போது, "பாவம் செய்யாதீர்" என்று கூறினார்கள்.

கல்வி என்பது ஒளியாகும். பாவமென்பது இருளாகும். ஒளியும் இருளும் ஒரே இடத்தல் இருப்பது சாத்திய மில்லாததைப் போல், பாவமிருக்கும் உள்ளத்தில் இல்ம் இருப்பதில்லை. உள்ளத்தில் பாவம் வந்து விட்டால் இல்ம் வெளியேறிவிடும். நல்லவரும் தீயவரும் ஒரு இடத்தில் இருந்தால், நல்லவரே அங்கிருந்து விலகிச் செல்வார். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் இமாம் ஷாஃபியி (ரஹ்) அவர்களிடம்

ارى الله تعالى على قلبك نورا فلا تفطئه بظلمت المعاصي.

அல்லாஹ் உமது உள்ளத்தில் ஒளியை வழங்கியிருப்பதை நான் காணுகிறேன். எனவே உமது பாவங்களின் இருளினால் அதை அனைத்து விட வேண்டாம் என்றார்கள். ஆக, பாவத்தின் காரணமாக மனன ஆற்றல் குறைந்து விடுகின்றன.

இதனால் தான் சில மாணவர்கள், ஆசிரியர்களிடம் "ஏதும் நினைவில் இருப்பதில்லை. மனனம் செய்தாலும் மறந்து விடுகிறது" என்று முறையிடுகின்றனர். எங்கு (عصيان) பாவங்கள் இருக்குமோ அங்கு (نسيان) மறதி இருக்கும்.

முந்தைய காலத்தில் ஒரு இலட்சம் ஹதீஸ்களை மனனம் செய்து, மறந்து விடாத மாணவர்களெல்லாம் இருந்தார்கள். அவர்களுக்கு ஹதீஸ்களை கேட்க, கேட்க மனனமாகிக் கொண்டே இருந்தது. ஆனால் இன்றோ பாவங்களின் காரணமாக மனனம் செய்யும் சில மாணவர்கள் கூட பின்பு மறந்து விடுகின்றனர்.

## 3. சம்பாத்தியத்தில் நெருக்கடி

பாவங்களின் காரணமாக ஹலாலான சம்பாத்தியத்தில் நெருக்கடி ஏற்படும். ஹராமான சம்பாத்தியம் நிறையவே கிடைக்கும். அதாவது பார்ப்பதற்கு இலட்சக் கணக்கில் வியாபாரம், கொடுக்கல், வாங்கல் இருக்கும். ஆனால் கடனும் இலட்சக்கணக்கில் இருக்கும். வங்கி கடன், வட்டி கடன், கிரெடிட் கார்ட் கடன் போன்ற பல கடன்கள் சூழ்ந்திருக்கும். பார்ப்பதற்கு பெரும் பெரும் அந்தஸ்த்தில் இருப்பார்கள்.

ஆனால் அதே அளவில் கடனும் குவிந்திருக்கும். வாழ்க்கையே நெருக்கடியில் ஆகிவிடும். ஒரு ஏழையோ நிம்மதியாக தூங்குவான். ஆனால் இந்த செல்வந்தர்களுக்கு தூக்க மாத்திரை சாப்பிடாமல் தூக்கமே வருவதில்லை.

எனவே தான் ஐரோப்பிய மக்களுக்கு மாதத்தின் முதல் 18 நாட்களில் சம்பாதிப்பவை கடன்களுக்கும், பில்களை கட்டுவதற்குமே சரியாகி விடுகின்றன. மீதி நாட்களின் சம்பாத்தியத்தில்தான் அவர்களின் உணவும், உடையும்.

நபித்தோழர்கள் ஒருவர் தன் சுயதேவைக்காக ஒதுக்கு புறமாக சென்றார். அவருக்கருகில் ஒரு பொந்து இருந்தது. பொந்துக்கு உர்தூவில் 'பில்' என்று சொல்லுவார்கள்.

அவர் அந்த பொந்தைப் பார்த்துக் கொண்டிருந்த போது அதிலிருந்து ஒரு எலி தன் வாயில் ஒரு தங்க நாணயத்தைக் கொண்டு வந்து, அந்த ஸஹாபிக்கு முன்னால் போட்டது. மீண்டும் சென்று வேறு நாணயத்தை, இவ்வாறே சுமார் 17 நாணயங்களைக் கொண்டு வந்து போட்டது. அந்த ஸஹாபி அதை எடுத்தக் கொண்டு நபியிடம் சென்றார். ஸஹாபாக்களிடமிருந்த நல்ல பழக்கம், அவர்களுக்கு புதுமையான விஷயம் ஏதேனும் ஏற்பட்டால் அதை முதலில் நபியிடம் கூறி என்ன செய்ய வேண்டுமென்று கேட்பார்கள்.

அதன் படி அந்த ஸஹாபி நபியிடம் நடந்த விஷயத்தை கூறி, நாணயங்களையும் காட்டி, நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். அதற்கு நபியவர்கள் "இது அல்லாஹ் உமக்கு ஏற்படுத்தி தந்த ரிஸ்க்" என்றார்கள். ஆக, ஸஹாபாக்களின் வாழ்க்கை அல்லாஹ்வுக்கு பிடித்தமாக இருந்தது. எனவே அவர்களுக்கு 'பில்' (பொந்து)லிருந்து பணம் கிடைத்தது. ஆனால் நமக்கோ சம்பாத்தியம் அனைத்தும் 'பில்'களை கட்டுவதிலேயே செலவாகிறது.

ஆக, சம்பாத்தியத்தில் நெருக்கடி என்பதின் அர்த்தம் ஹலாலான சம்பாத்தியத்தில் நெருக்கடி உண்டாகிவிடும் என்பதே. சிலர் "ஒரு காலமிருந்தது. அப்போதெல்லாம் மண்ணை தொட்டால் தங்கமாக மாறிவிடும். அனால் இப்போது யாரோ ஏதோ செய்து விட்டார்கள். தங்கத்தைத் தொட்டாலும் மண்ணாக மாறிவிடுகிறது" என்று கூறுவதுண்டு.

அசலில் யாரும் ஏதும் செய்யவில்லை. நமது மனோ இச்சைகளே அனைத்தையும் செய்தன. நம் மனோ இச்சைகள், பாவங்களின் காரணமாக நம்மிடம் எவ்வளவு பணம் இருந்தாலும் நெருக்கடி இன்னும் ஏழ்மையே இருக்கிறது. இதற்கு அல்லாஹ் குர்ஆனில் ஒரு உவமையை கூறுகிறான்.

وَضَرَبَ اللّٰهُ مَثَلًا قَرْيَةً كَانَتْ اٰمِنَةً مُّطْمَىِٕنَّةً يَّاْتِيْهَا
رِزْقُهَا رَغَدًا مِّنْ كُلِّ مَكَانٍ فَكَفَرَتْ بِاَنْعُمِ اللّٰهِ فَاَذَاقَهَا
اللّٰهُ لِبَاسَ الْجُوْعِ وَالْخَوْفِ بِمَا كَانُوْا يَصْنَعُوْنَ ﴿١١٢﴾

அல்லாஹ் ஒரு ஊரை உதாரணமாகக் கூறுகிறான். அது அச்சமற்றதாக, நிம்மதியானதாக இருந்தது. அதற்குரிய உணவு(ப் பொருட்கள்) ஒவ்வோர் இடத்திலிருந்தும் தாராளமாக அதற்கு வந்துக் கொண்டிருந்தன. (அந்நிலையில்) அல்லாஹ்வுடைய அருட்கொடைகளை அது நிராகரித்தது. (16:112)

அவர்கள் செய்து கொண்டிருந்த(தீய)தின் காரணமாக பசி, பயம் என்ற ஆடையை அல்லாஹ் அதற்கு அனுபவிக்கச் செய்தான். இந்த ஆயத்தில் குர்ஆனுடைய நுணுக்கமான போங்கை காணலாம். அதாவது இந்த ஆயத்தில் அல்லாஹ் امن – اطمئنان என்ற இரு வார்த்தைகளை கூறியுள்ளான். امن என்றால் வெளியிலிருக்கும் எதிரியை விட்டும் பயமின்றி நிம்மதியாக இருப்பதற்கு சொல்லப்படும். اطمينان என்பது உள்ளத்தில் எவ்வித அச்சமும் இல்லாமலிருப்பதற்கு சொல்லப்படும்.

இந்த ஆயத்தின் விளக்கம் :- ஒரு ஊர் மக்களைப் பற்றி அல்லாஹ் உவமை காட்டுகிறான். அவ்வூர் வாசிகளுக்கு நிம்மதியுமிருந்தது. உள அமைதியுமிருந்தது. அதாவது அவர்களுக்கு வெளியில் எந்த திடுக்கமுமில்லை.

உள்ளத்தில் எவ்வித பயமும் இல்லை. நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருந்தார்கள். நாலா புறங்களிலிருந்தும் அவர்களுக்கு செல்வ செழிப்பு மழையாய் கொட்டியது இருப்பினும் அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை மதிக்க வில்லை.

அவற்றுக்காக நன்றி செலுத்தவில்லை. எனவே அவர்களின் செயல்களின் காரணமாக அல்லாஹ் அவர்களுக்கு பசி, நெருக்கடி இன்னும் பயத்தின் ஆடையை அணிவித்து விட்டான். அல்லாஹ் இந்த ஆயத்தில் பசி இன்னும் பயம் ஏற்பட்டு விட்டதென்று கூறாமல் பசி இன்னும் பயத்தின் ஆடை என்று கூறியுள்ளான். குர்ஆனின் ஒவ்வொரு வார்த்தைக்கும் பல நுணுக்கமான கருத்துக்கள் இருக்கின்றன. அதாவது பசி இன்னும் பயத்தின் தாக்கம் குறிப்பிட்ட ஒரு உறுப்பில் மட்டும் இருக்காது. மாறாக ஆடையைப் போல் முழு உடலையும் சூழ்ந்து தாக்கும். இதுவெல்லாம் பாவத்தின் பாதிப்புகளே. எனவே தான் நபியவர்கள்

ان الرجـــل ليحـــرم الـــرزق بالـــذنب ليصـــيبه

நிச்சயமாக மனிதன் அவன் செய்யும் பாவத்தின் காரணமாக அவனுக்கு கிடைக்கவிருந்த ரிஸ்கை விட்டும் தடுக்கப்படுகிறான் என்று கூறியுள்ளார்கள்.

## 4. அல்லாஹ்வை விட்டும் தூரமாகுதல்

பாவம் செய்பவரின் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீது ஒருவித வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ்வின் மீதுள்ள பிரியம், அல்லாஹ்வுடனான தொடர்பு எதுவுமே இல்லாமலாகி விடுகிறது.

அல்லாஹ்வை திக்ரு செய்வதில் அல்லாஹ்வைப் பற்றி பேசுவதில் இன்னும் சொல்லப்போனால் அல்லாஹ்வைப் பற்றி நினைப்பதிலும் கூட உள்ளம் ஈடுபடுவதில்லை. இறை நேசர்களிடமோ, இறைவனைப் பற்றி பேசப்படும் இடங்களுக்கோ, செல்வதற்கு உள்ளம் நாடுவதே இல்லை. பள்ளியில் அமருவதும் , தொழுவதும் பெரும் சுமையாக தெரியும்.

ஒருவர் மீனை வாங்கி, அதை சுமந்து செல்ல ஒரு கூலிக்காரரை அழைத்தார். அந்த கூலிக்காரர் "நான் உங்கள் வீடு வரை சுமந்து வருகிறேன். ஆனால் இடையில் தொழுகை நேரம் வந்து விட்டால் தொழ சென்று விடுவேன்" என்று நிபந்தனையிட்டார். அவரும் எற்றுக் கொண்டார். சுமந்து சென்றுக் கொண்டிருந்த போது இடையிலேயே தொழுகை நேரம் வந்துவிட்டது. எனவே அந்த கூலிக்காரர் நிபந்தனையிட்ட படி பள்ளிக்கு சென்று விட்டார்.

அந்த நபரோ வெளியில் நின்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மக்களெல்லாம் தொழுதுவிட்டு வெளியே வந்த போது அந்த கூலிக்காரர் மட்டும் வரவே இல்லை. இதைப்

பார்த்த அந்த நபர் கோபமடைந்து வெளியில் இருந்தவாறே அந்த கூலிக்காரரிடம் "உன்னை வெளியே வருவதை விட்டும் தடுத்தது யார்? என்று சப்தமிடவே, அந்த கூலிக்காரர் உள்ளிருந்தவாறே" உன்னை யார் பள்ளிக்குள் வர விடாமல் தடுத்தானோ, அவனே என்னை வெளியே வருவதைவிட்டும் தடுக்கிறான்" என்று பதிலளித்தார்.

பள்ளிக்கு அருகிலேயே வீடுகள், கடைகள் இருந்து எத்தனையோ நபர்கள் ஐவேளை தொழுகையையும் விட்டு விடுவதை நாம் காண்கிறோம். பள்ளியைஒட்டியே கடை இருந்தும், பள்ளிக்கு சொந்தமான கட்டிடத்தில் கடை வைத்திருந்தும் தொழுவதற்கான எண்ணமே வருவதில்லை.

ஆக, பாவத்தின் காரணமாக மனிதன் அல்லாஹ்வைப் பற்றிய பேச்சுக்கள், இறை உபதேசங்கள் எதையுமே விரும்புவதில்லை. விரண்டோடுகிறான். யாராவது அவனிடம் அல்லாஹ்வைப் பற்றி பேசினால் அவனுக்கு நெஞ்சு - அடைப்பதை போன்றிருக்கும். உள்ளத்தில் வெறுப்பு உண்டாகிவிடும. அவன் அவர்களை விட்டும் தப்பிப்பதற்கான வழியை தேடுவான். இதுவெல்லாம் பாவத்தினால் ஏற்படும் பாதிப்புகளே. இதைப்பற்றியே அல்லாஹ் குர்ஆனில்

كَلَّا بَلْ رَانَ عَلَىٰ قُلُوبِهِم مَّا كَانُوا يَكْسِبُونَ ﴿١٤﴾

அவ்வாறல்ல! எனினும் அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்தவை அவர்களுடைய நெஞ்சங்களில் துருவாகி (உண்மையை மறைத்து) விட்டன. (83:14) என்று கூறுகிறான்.

## 5. மனிதர்களின் மீது வெறுப்பு

பாவத்தின் காரணமாக அவனுக்கு மனிதர்கள் மீது ஒரு வித வெறுப்பு உண்டாகிவிடுகிறது. இனம் புரியாத பயம், திடுக்கம் அவன் உள்ளத்தை ஆட்டிப்படைக்கின்றன. மனிதர்களை

சந்திப்பதும், உற்றார் உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வதும் பெரும் சுமையாக தெரிகிறது. தனிமையையே விரும்ப ஆரம்பித்து விடுகிறான். அவனுடைய உள்ளம் அந்த அளவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி விடுகிறது.

## 6. வேலைகளில் தடை ஏற்படுதல்

பாவத்தின் காரணமாக வெற்றிகளுக்கான வாயில்கள் மூடப்பட்டு விடுகிறது. அவனுடைய எல்லா வேலைகளிலும் எதேனுமொரு தடை வந்துவிடுகிறது. நன்றாக கொடி கட்டி பறக்கும் எத்தனையோ வியாபாரங்கள் திடீரென்று நஷ்டமடைந்து விடுகின்றன.

இதற்கெல்லாம் காரணமென்ன? ஒரு அடியான் 'தக்வா' வை மேற்கொண்டால் அவனுடைய வேலைகளுக்கு அல்லாஹ்வே பொருப்பாளியாக ஆகி அந்த வேலைகளை சீராகவும் , சிறப்பாகவும் ஆக்குகிறான்.

ஆனால் அந்த அடியான் பாவங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டால் அல்லாஹ் தன் பார்வையை திருப்பிக் கொள்கிறான். இதனால் சீரும், சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருந்த இவனுடைய வேலைகள் தடைபட்ட விடுகின்றன.

ஒரு அறிவிப்பில் வருகிறது, அல்லாஹ் தன் அடியானிடம் "என் அடியானே! உன் நாட்டம் ஒன்றாக இருக்கிறது. என் நாட்டம் வேறொன்றாக இருக்கிறது. உன் நாட்டமே நிறைவேற வேண்டுமென்று நீ விரும்பி அதற்காக எவ்வளவு முயற்சி செய்தாலும் நான் உன்னை களைப்படையச் செய்துவிடுவேன். உன் நாட்டத்தையும் நிறைவேற்ற மாட்டேன்.

ஆனால் இதற்கு மாற்றமாக நீ எனது நாட்டமே நிறைவேற வேண்டுமென்று விரும்பி, எனக்காக பாடுபட்டால் உன்

வேலைகளில் உனக்கு நானே போதுமானவனாகிவிடுவேன். உன் விருப்பத்தையும் நிறைவேற்றி தருவேன்'' என்று ஹதீஸ் குத்ஸியில் கூறுகிறான்.

ஆக, பாவங்களினால் வெற்றிப் பாதை அடைபட்டு விடுகிறது. 'தக்வா' வின் மூலமே இந்த பாதை திறக்கும். எனவே தான் அல்லாஹ் குர்ஆனில்

وَمَنْ يَتَّقِ اللَّهَ يَجْعَلْ لَهُ مَخْرَجًا ۝

அன்றியும், எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்கிறாரோ அவருக்கு (ஒவ்வொரு சங்கடத்திலிருந்தும்) வெளியேறும் வழியை அவன் ஆக்குவான். இன்னும் அவருக்கு அவர் நினையாத புறத்திலிருந்து உணவும் அளித்திடுவான். *(65:243)* என்று கூறியுள்ளான்.

இதன் கருத்து, யார் தக்வாவை மேற்கொள்வாரோ அல்லாஹ் அவருக்கு வெற்றியின் பாதைகளை திறந்து விடுவதோடு அவன் அறியாத புறத்திலிருந்து அல்லாஹ் அவனுக்கு செல்வத்தை (ரிஸ்கை)யும் தருவான்.

ஆனால், பலஹீனமான ஈமான் உள்ள எத்தனையோ நபர் இதை அறியாமல் யாரோ ஏதோ செய்துவிட்டார். இன்ன நபர் சூனியம் செய்துவிட்டார். இன்ன நபர் செய்வினை செய்துவிட்டார் என்று புலம்பிக் கொண்டிருக்கின்றனர். இது முற்றிலும் தவறு. நாம் அல்லாஹ்வுடைய பாதுகாப்பில் இருந்தால் யாரும் ஏதும் செய்ய முடியாது.

இறைவன், ஒருவனுக்கு எதையேனும் கொடுக்க நாடினால் முழு உலகம் ஒன்று சேர்ந்தும் அதை தடுக்க முடியாது. இதே போன்று இறைவன் எதையேனும் தடுக்க நாடினால் முழு உலகம் ஒன்று சேர்ந்தும் அதை கொடுக்க முடியாதென்பது ஒரு நபிமொழியின் விளக்கமாகும். அல்லாஹ்வும் தன் திருமறையில்

نَحْنُ قَسَمْنَا بَيْنَهُم مَّعِيشَتَهُمْ

நாம்தாம் உலக வாழ்வில் அவர்களுக்கிடையே அவர்களுடைய உணவைப் பங்கிட்டுள்ளோம். *(43:32)* என்று கூறியுள்ளான். இந்த பங்கீட்டை யாராலும் தடுத்து விட முடியாது. எனவே மனிதர்களை நினைத்து பயப்பட தேவையில்லை. தன் பாவங்களை நினைத்தே பயப்பட வேண்டும்.

## 7. உள்ளத்தில் தாக்கம் ஏற்படுவதில்லை

பாவங்களின் காரணமாக உள்ளத்தில் எந்த தாக்கமும் ஏற்படுவதில்லை. பாவங்கள் செய்வது தவறென்றே தெரிவதில்லை.

நன்மைகள் செய்தால் அதை நன்மையாக கருதுவதில்லை. உள்ளத்தில் எவ்வித தாக்கமும் ஏற்படாமல் உள்ளமே கல்லைப் போன்று ஆகிவிடுகிறது. எத்தனையோ நபர்கள் “ஹள்ரத் சிலர்கள் பயான்களையோ, இறை உபதேசங்களையோ கேட்டு அழுகின்றனர். ஆனால் எனக்கு அழுகையே வருவதில்லையே என்று கவலையுடன் கூறுகிறார்கள்.

கண்ணீர் எப்படி வரும். அவர்களின் பாவங்கள் கண்ணீரை உறையச் செய்துவிட்டது. அவர்களின் கண்கள் வறண்டுவிட்டன. இறையச்சம் அவர்களின் உள்ளத்தில் வந்தால் தான் அவர்களின் கண்கள் செழிப்படைந்து கண்ணீரை வடிக்கும்.

நன்மையின் பிரகாசமும், முகத்தில் தெரியும். பாவத்தின் இருள் முகத்தில் தெரியும். நம் கண்களுக்கு இது தெரியாவிட்டால் நமது குறையே. இறை நேசர்கள் ஒரு மனிதனின் முகத்தை பார்த்தவுடனேயே இவன் தன் வாழ்வை எப்படி கழிக்கிறான் என்பதை அறிந்தக் கொள்வார்கள். ஆக பாவத்தின் காரணமாக முகத்தில் அதன் இருளும், உடலில்

சோம்பலும் ஏற்படுகிறது. உடலில் சோம்பல் என்பதின் நோக்கம், தீனுடைய வேலைகள் செய்வதை சுமையாக கருதுவது. அவனே தொழ நாடினாலும் கூட உடல் ஒத்துழைப்பதில்லை. இத்தகையோரைப் பற்றியே அல்லாஹ் திருக்குர்ஆனில்

وَإِنَّهَا لَكَبِيرَةٌ إِلَّا عَلَى الْخَٰشِعِينَ ۝

நிச்சயமாக அ(த் தொழுகையான)து உள்ளச்சம் உள்ளவர்கேயன்றி (மற்றவருக்குப்) பெரும் பாரமாகவே இருக்கும். (2:45) என்று கூறியுள்ளான்.

யாருடைய உள்ளத்தில் ஒளி பிரகாசம் இருக்குமோ அவருக்கு தொழாமல் நிம்மதி இருக்காது. இவர்கள் சுவனத்திலும் தொழுகையை எதிர்பார்ப்பார்கள். ஆனால் பாவம் செய்பவர்களுக்கு தொழுவதில் மிகவும் சோம்பல் ஏற்படுகிறது. இவர்களின் பாவங்கள் இவர்களின் உள்ளங்களை கருமையாக்கிவிடுகிறது. ஆனால் நன்மைகளோ மனிதனின் முகத்தில் பிரகாசத்தை ஜொலிக்க வைக்கிறது.

நபியவர்களிடம் இறைநேசர்களின் அடையாளம் என்ன? என்று கேட்கப்பட்ட போது

الذين اذا رؤوا ذكر الله

யாரைப்பார்த்தால் இறைவனின் ஞாபகம் வருமோ அவர்களே இறை நேசர்கள் என்று பதிலளித்தார்கள்.

இந்து மதத்தைச் சார்ந்த சிலர்கள் ஹள்ரத் அன்வர் ஷாஹ் கஷ்மீரி (ரஹ்) அவர்களிடம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். மற்ற இந்துக்கள் இவர்களிடம் "நீங்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டீர்கள்?" என்று கேட்ட போது ஹள்ரத் அவர்களின் முகத்தின்-பால் சைக்கினை செய்து

"கண்டிப்பாக இது ஒரு பொய்யனின் முகமாக எங்களுக்கு தெரியவில்லை'' என்று பதிலளித்தார்கள். ஆக, இறைநேசர்களின் முகத்தில் ஈமானின் பிரகாசம் வெளிப்படுகிறது.

## சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி

இவர்கள் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் எதிரிகளின் பெரும் படை கடல்வழியாக வந்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தி கிடைத்தது. முஸ்லிம்களின் படையோ குறைவாகவே இருந்தது. எனவே அவர் மிகவும் கவலையடைந்து பைத்துல் முகத்தஸிற்கு சென்று அல்லாஹ்வை வணங்கி, உதவி வேண்டி மன்றாடினார். இரவு முழுவதும் இப்படியே கழிந்தது. ஃபஜ்ர் நேரமும் வந்து விட்டது.

ஃபஜ்ர் தொழுதுவிட்டு வெளியே வந்த போது பள்ளிவாயிலில் ஒரு இறைநேசரை சந்தித்தார். அவரின் முக பிரகாசத்தை கண்டவுடன் ஏதோ சுபச் செய்தி கிடைத்ததைப்போல் ஒரு வித சந்தோஷமும், மன நிம்மதியும் ஏற்பட்டது.

உடனே அவரிடம் சென்று "ஹள்ரத்! எதிரிகளின் பெரும் படை கடல் வழியாக வந்துகொண்டிருக்கிறது. முஸ்லிம்களின் உதவிக்காக தாங்கள் துஆ செய்யுங்கள்'' என்று வேண்டினார். அந்த இறைநேசர் சுல்தான் ஸலாஹுத்தினை பார்த்து இவரின் இரவு எப்படி கழிந்தது. என்பதை அறிந்து கொண்டு "தாங்கள் இரவில் வடித்த கண்ணீர் எதிரிப்படைகளை கடலிலேயே மூழ்கடிக்க செய்து விட்டது'' என்றார்.

3 நாட்களுக்குப் பிறகு உண்மையிலேயே எதிரிப்படை கடலில் மூழ்கிவிட்டதாக செய்தி கிடைத்தது. ஆக இறைநேசர்களின் முகத்தில் ஈமானின் பிரகாசம் வெளிப்படுகிறது.

அப்துல்லாஹ் இப்னு ஸலாம் என்பவர் யூதர்களின் மிகப் பெரும் அறிஞராக இருந்தார். அவரை யூதர்கள் நபியிடம் சில கேள்விகளை கேட்டு வருமாறு அனுப்பியிருந்தார்கள். ஆனால் அவரோ நபியவர்களின் முக ஜோதியை கண்டு அதிலிருந்து ஈமானிய பிரகாசத்தை பெற்று இஸ்லாத்தை ஏற்று சென்றார். அவரிடம் காரணம் கேட்ட போது "நபியின் முகம் ஒரு பொய்யனின் முகமாக எனக்கு தெரியவில்லை" என்று பதிலளித்தார்.

## 8. உடலிலும் இன்னும் உள்ளத்திலும் பலகீனம்

பாவங்களின் காரணமாக மனிதனின் உடலும், உள்ளமும் பலஹீனமடைந்து விடுகிறது. பார்ப்பதற்கு வீரனைப் போல் தெரிந்தாலும் உள்ளத்தில் கோழைத்தனம் இருக்கும். உள்ளத்தில் ஒருவித பயம் குடி கொண்டிருக்கும். நல்ல விஷயங்களை செய்வதற்கு துணிச்சல் ஏற்படாது. உள்ளத்தில் கோழைத்தனமும் உடலிலும் சோம்பலும் ஏற்பட்டு விடும்.

## 9. வணக்க வழிபாட்டில் தடை:-

பாவங்களின் காரணமாக வணக்க வழிபாடுகளில் தடை ஏற்பட்டுவிடும். அதாவது இன்று ஒரு பாவம் செய்தால் ஒரு வணக்கம் தடைபடும். நாளை ஒரு பாவம் செய்தால் நாளை ஒரு வணக்கம் தடைபடும்.

உதாரணமாக முதலில் நஃபிலான வணக்கம் தடைபடும். பின்பு செல்ல செல்ல சுன்னத்துகளும் விடுபடும். அப்போது தான் இது பாவத்தின் பாதிப்புகள் என்பது தெரியவரும். ஆன்மீகத்தில் ஈடுபாடுள்ளவராக இருந்தால் முதலில் ஷைகுடனான தொடர்பு துண்டித்து விடும். பின்பு அன்றாட திக்ருகள் விடுபடும். பின்பு தஹஜ்ஜுத் விடுபடும். அதற்கு பின்பு வெளிப்படையான அமல்களும் தடைபட்டுவிடும். பாவங்களின் காரணமாக மனிதனின் ஆயுள்

குறைக்கப்பட்டுவிடும். இதற்கு உலமாக்கள் இரு விளக்கங்கள் கூறுகின்றனர்.

1. உண்மையிலேயே ஆயுள் குறைந்து விடுவது. நன்மை செய்திருந்தால் 90 வயது வரை வாழ்ந்திருப்பான். ஆனால் பாவங்களின் காரணமாக 70 வயது வரையே வாழ்வான் என்று அல்லலாஹ் நிர்ணயித்துவிடுவான். ஒரு ஹதீஸில் ஸதகா ஆயுளை அதிகரிக்கும். பாவங்கள் ஆயுளை குறைக்கும் என்று வந்துள்ளது.

2. உண்மையிலேயே ஆயுள் குறையாது. மாறாக ஆரோக்கியமான வாழ்வு சென்றுவிடும். 80 வயதில் வரவேண்டிய நோய்கள் 40 வயதிலேயே வந்துவிடும். (உ.ம்) 40 வயதிலேயே இரத்த கொதிப்பு, சர்க்கரை வியாதி, மாரடைப்பு போன்ற வியாதிகள் வந்துவிடும். அவனால் ஓடி, ஆடி உழைக்க முடியாது.

ஏதும் செய்ய முடியாது. குறைந்த வயதிலேயே அவன் மற்றவர்களின் பால் தேவையுள்ளவனாகி விடுவான். இவையும் பாவத்தின் பாதிப்புகளே. அவனுக்கு ஆயுள் குறையாவிட்டாலும், அந்த ஆயுளில் அவனால் ஏதும் செய்ய முடியாத நிலையில் அவனுடைய ஆரோக்கியம் நீங்கிவிடுகிறது. ஆனால் அவர் நல்லமல்கள் செய்பவராக இருந்தால் தன் ஆயுள் முழுவதிலும் ஆரோக்கியமாக இருப்பார்.

### ஒரு நல்லடியாரின் ஆரோக்கியம்

எங்கள் ஆசிரியர் முர்ஷித் ஆலம் (ரஹ்) அவர்களுக்கு 90 வயது. இவர்களுக்கு சர்க்கரை வியாதியும் இருந்தது. ஒருதடவை எங்களுடன் நோன்பு திறந்தார்கள். அப்போது செய்த உளூவுடனே இஷாவையும் தராவீஹையும் தொழுதார்கள். பின்பு ஸஹருடைய நேரம் வந்ததும் ஸஹர் உணவு சாப்பிட்டார்கள். பின்பு அவர்களிடம் ''தாங்கள் உளூ செய்ய

வேண்டுமா?'' என்று கேட்ட போது ''என் உளூ இத்துப்போன நூலைப் போன்று இலேசாக (அறுந்துவிடும்) நீங்கிவிடும் என்று எண்ணிக் கொண்டீர்களா?'' என்று கூறிவிட்டு பின்பு அதே உளூவுடன் ஃபஜ்ர் தொழ வைத்தார்கள். பின்பு குர்ஆன் பாடம் நடத்தி அதே உளூவுடன் இஷ்ராகும் தொழுதார்கள். நாங்களனைவரும் ஆச்சரியமடைந்து விட்டோம்.

ஒரு வாலிபனுக்கும் கூட ஒரே உளூவுடன் நோன்பு திறந்ததிலிருந்து அடுத்த நாள் இஷ்ராக் வரை இருப்பது மிகவும் சிரமமானது. இது மட்டுமில்லை. ஹள்ரத் அவர்களுக்கு 90 வயதாகியும் ஒரு 'பல்' கூட விழவில்லை.

எவ்வளவு கெட்டியான ரொட்டியையும் நன்கு மென்று சாப்பிடுவார்கள். அவர்களின் கண்பார்வை, செவிபுலன் அனைத்தும் நன்றாக இருந்தது. உடல் ஆரோக்கியம் எந்தளவுக்கென்றால் அவர்களுக்கு முன்பு நாங்களெல்லாம் கோழிக் குஞ்சுகளைப் போன்றிருப்போம். இந்த வயதிலும் இவ்வளவு ஆரோக்கியமாக இருந்ததின் காரணமென்ன?

## ஹள்ரத் முர்ஷித் ஆலம் (ரஹ்) அவர்களும் கிறிஸ்தவனும்

ஹள்ரத் அவர்களிடம் நாங்கள் ''உங்களைப் போல ஆரோக்கியமுள்ளவரை நாங்கள் எங்கும் கண்டதில்லை'' என்று சொன்ன போது ஹள்ரத் அவர்கள் ஒரு விஷயத்தை சொன்னார்கள். அதாவது ஒரு கிறிஸ்த்தவன் இருந்தான். அவன் பெரும் பைல்வானாக இருந்ததால் மக்கள் அவனைப் பார்த்தாலே பயப்படுவார்கள்.

ஒருமுறை எனக்கு அவனுடன் விவாதம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் குர்ஆனை எடுத்துச் சென்றேன். அவன் திருமணம் செய்யாத வாலிபனாகவும், பெரும் பைல்வானாகவும் இருந்தான். நான் அவனை சந்தித்து கை கொடுத்த பொழுதுஅவன் என் கையை பிடித்து குலுக்க முயற்சி செய்தான்.

ஆனால் நான் அவனது கையை கெட்டியாக பிடித்து விட்டேன். எனவே அவனால் என் கையை அசைக்கவும் இயலவில்லை. கடும் முயற்சி செய்தும் கை சற்றும் அசையாததால் அவன் திகைப்படைந்து "விவாதத்தை பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் நீங்கள் இந்தளவு ஆரோக்கியமாக உள்ளீர்களே! நீங்கள் எந்த சத்தான உணவை சாப்பிடுகிறீர்கள்? என்பதை சொல்லுங்கள் என்றான்.

அதற்கு நான் "பருப்பும் கீரையும் தான் சாப்பிடுகிறேன்" என்றேன். அதற்கு அவன் இல்லை! இல்லை! நான் பைல்வானாக இருக்கிறேன். நான் ஒவ்வொரு நாளும் எவ்வளவோ பாலும், நெய்யும், இறைச்சியும் சாப்பிடுகிறேன். பல தடவை மலையில் ஏறி இறங்குகிறேன். அதிகமாக உடற்பயிற்சிகள் செய்கிறேன். மேலும் எனது வலிமையை இழக்கக் கூடாதென்பதற்காக இதுவரை திருமணமும் செய்யாமலிருக்கிறேன். இப்படியெல்லாம் செய்வதினாலேயே எனக்கு இந்தளவு ஆரோக்கியமும், உடல் பலமும் இருக்கின்றது. அப்படியிருந்தும் என்னால் உங்கள் கையை கூட அசைக்க முடியவில்லையே? உங்களுக்கு இந்தளவு ஆரோக்கியம் எப்படி கிடைத்தது?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

அதற்கு நான் "பருப்பும், கீரையும் தான் சாப்பிடுகிறேன். இருப்பினும் என்னிடம் இரு குணங்கள் இருக்கின்றது. 1. இதுவரை எனக்கு தவறான முறையில் இந்திரியம் வெளியாகவில்லை. 2. ஒரு போதும் எனக்கு தஹஜ்ஜுத் தொழுகை தவறியதில்லை.

இவ்விரு விஷயங்களின் காரணமாகவே அல்லாஹ் எனக்கு இவ்வளவு ஆரோக்கியத்தை வழங்கியுள்ளான். மேலும் ஒரு முறை எனக்கு லைலத்துல் கத்ர் இரவில் வணங்கும் - பாக்கியமும் கிடைத்துள்ளது. அப்போது எனது ஆயுளில் பரகத் கிடைப்பதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்தேன்" என்று கூறினேன்.

ஆக, அல்லாஹுதஆலா ஒரு நல்லடியானுக்கு அயுளில் பரக்கத் தருவதாக இருந்தால் சில சமயம் அயுளை நீட்டிவிடுகிறான். அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆயுளிலேயே ஆரோக்கியமான வாழ்வை தந்து விடுகிறான். இதற்கு மாறாக ஒருவன் பாவம் செய்தால் அவனுடைய ஆயுளை குறைத்து விடுகிறான். அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆயுளிலேயே நோயுள்ள வாழ்வை தந்துவிடுகிறான்.

## 10. தொடர்ந்து பாவங்கள் செய்தல்

பாவத்தின் பாதிப்புகளில் அடுத்து ஒரு பாவம் செய்தால் அது வேறு பாவத்திற்கு வழிவகுக்கிறது. ஒரே ஒரு தடவை மட்டும் இந்த பாவத்தை செய்துக் கொள்ளலாம். மீண்டும் இதை செய்யக் கூடாதென்று மனிதன் எண்ணுவான். ஆனால் ஒரே ஒரு தடவை பாவம் செய்தால் அது அவனை வேறு பாவத்திற்கு தூண்டுகிறது.

ஒருவன் தன் நண்பனை ஒரு தீய பெண்ணுடன் அறிமுப்படுத்தி வைக்கிறான். இவனும் ஒரே ஒரு முறை சந்தித்து விடலாம் என்றெண்ணி சந்தித்து விடுகிறான். இது அடுத்த பாவத்திற்கு வழி வகுத்து விடுகிறது. அவன் அந்த பெண்ணுடன் தகாத தொடர்பு கொள்கிறான். அதற்குப் பின் அடுத்த பாவத்தின் வாசல் திறந்து விடுகிறது. அவன் பொய் சொல்ல ஆரம்பிக்கின்றான். தந்தையிடம் பொய், தாயிடம் பொய், இப்படியே அனைவரிடமும் பொய் சொல்கிறான். இந்த 'பொய்' யை மறைக்க இன்னும் பல 'பொய்' களை கூறுகிறான். இறுதியாக அல்லாஹ், மலக்குகளிடம் "இந்த நபரின் பெயரை அதிகம் பொய் சொல்பவர்களின் பட்டியலில் சேர்த்துவிடுங்கள்" என்று கட்டளையிடுகிறான்.

## 11. தவ்பா செய்யும் பாக்கியமே கிடைப்பதில்லை

பாவங்களின் பாதிப்புகளில் அடுத்து, அந்த நபரிடமிருந்து தவ்பா செய்யும் பாக்கியம் பிடுங்கப்படுவதாகும். இன்று தவ்பா

செய்வோம், நாளை செய்வோம் என்று பிற்படுத்திக் கொண்டே இருப்பான். தவ்பா செய்ய மாட்டான். அந்த பாக்கியம் அவனிடமிருந்து பிடுங்கப்பட்டுவிடும். அப்படி யாருக்கேனும் தன் பாவங்களுக்காக தவ்பா செய்யும் பாக்கியம் கிடைத்து விட்டால் அது அல்லாஹ்வுடைய பெரும் கிருபையாகும்.

தவ்பாவை பிற்படுத்தவே கூடாது. ஒரு பெரியார் ??? என்ற கிதாபில் ''நண்பரே! நீ தவ்பா செய்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் பாவங்கள் செய்வதும், வாழ்க்கை இன்னும் மீதமிருக்கிறது என்ற நம்பிக்கையில் தவ்பாவை பிற்படுத்துவதும் உன் அறிவு மங்கி விட்டதற்குறிய அடையாளமாகும் என்று எழுதியுள்ளார்கள்.

## 12. பாவத்தை ஒரு பொருட்டாகவே கருதாமலிருப்பது

பாவத்தின் பாதிப்புகளில் அடுத்து, பாவத்தினால் ஏற்படும் தீங்குகள் பற்றிய உணர்வு அவனது உள்ளத்திலிருந்து வெளியேறிவிடுகிறது. பாவத்தின் மீதுள்ள வெறுப்பு நீங்கிவிடுகிறது. பாவத்தை பாவமாகவே கருதுவதில்லை. உதாரணமாக, பிறரை திட்டுவது, பிறரை ஏமாற்றுவது இதுவெல்லாம் பாவமாகவே தெரிவதில்லை.

அவன் உள்ளத்திலிருந்து பாவ உணர்வு எந்தளவு நீங்கிவிடுகிறதெனில் தான் செய்த பாவங்களை ''நான் அவனை ஏமாற்றிவிட்டேன், மடையனாக்கிவிட்டேன்'' என்று பெருமையுடன் சொல்லி திரியுமளவு ஆகிவிடுகிறது. அல்லாஹ் இவனுடைய பாவங்களை மறைத்தாலும் இவன் தன் பாவங்களை பெருமையோடு சொல்லி திரிகிறான்.

இந்தளவு குற்ற உணர்வு அவனுடைய உள்ளத்தை விட்டும் நீங்கி விடுவதால், சில சமயம் குஃப்ருடைய வார்த்தைகளையும் மொழிந்து விடுகிறான். இதனால் அவனிடமிருந்து ஈமான் சென்று விடுகின்றது. ஆக, பாவங்கள் மிகைத்து இறுதியில்

ஈமானே பறிபோகும் நிலை ஏற்படுகிறது. அல்லாஹ் நம்மை பாவங்களை விட்டும், தவிர்ந்திருந்து உண்மையான தவ்பா செய்பவர்களாக ஆக்குவானாக! ஆமீன்...

## 13. பாவிகளின் வாரிசாக ஆகுதல்

பாவங்கள் செய்வது அல்லாஹ்வுடைய விரோதிகளுடன் ஒப்பாகுவதாகும். உதாரணமாக பெருமையடிப்பது 'ஆது' கூட்டத்தாருக்கும் ஒப்பாகுவதாகும். அளவை, நிறுவையில் மோசடி செய்வது ஷுஐப் (அலை) அவர்களின் கூட்டத்தாருக்கும் ஒப்பாகுவதாகும்.

இவ்வாறே ஒவ்வொரு பாவத்திற்கும் ஏதேனுமொரு தீய கூட்டத்துடன் ஒப்பாகுவது இருக்கின்றது. ஒரு ஹதீஸில் 'யார் ஒரு கூட்டத்தாருக்கு ஒப்பாகுவாரோ அவர் அக்கூட்டத்தில் உள்ளவராகவே கணிக்கப்படுவார்' என்று வந்துள்ளது.

### ஒரு சம்பவம்

இந்தியாவில் நிகழ்ந்த சம்பவம். புத்தகங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு முதியவர் பாதையில் சென்றுக் கொண்டிருந்தார். அன்று இந்து மதத்தினரின் ஹோலி பண்டிகை தினமாக இருந்தது. அந்த முதியவர் அன்றே மரணித்தும் விட்டார். அவரை கனவில் பார்த்த ஒருவர் "உங்கள் நிலை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார். அதற்கு அந்த முதியவர் "எனக்கு கப்ரு நரக படுகுழியாக ஆகிவிட்டது" என்று சொன்னார்.

அதற்கான காரணத்தை கேட்ட போது, அந்த முதியவர் "ஹோலி பண்டிகை நாளாக இருந்ததால் ஒருவருக்கொருவர் வர்ணம் பூசிக் கொண்டிருந்தனர். நான் வெற்றிலை பாக்கை மென்றுக் கொண்டே பாதையில் சென்றுக் கொண்டிருந்தேன். அங்கு ஒரு கழுதை இருந்தது. அதைப் பார்த்து "உனக்கு யாரும்

வர்ணம் பூச வில்லையே'' என்று கூறி என் வாயில் இருந்த பாக்கின் சிவப்பு எச்சிலை அந்த கழுதையின் மீது துப்பிவிட்டேன். அந்நேரத்தில் எனது உள்ளத்தில் என்ன தோன்றியதென்றே தெரியவில்லை.

நான் இப்படி ஒரு செயலை செய்து விட்டேன். என்னுடைய இந்த செயல் மாற்றார்களுக்கு ஒப்பாகிவிட்டதால் எனது கப்ரு நரக படுகுழியாக ஆகிவிட்டது'' என்று கூறினார். மாற்றார்களுடன் சிறிதளவு ஒப்பாகுவதையும் அல்லாஹ் விரும்புவதில்லை.

ஆனால் இன்று எத்தனையோ முஸ்லிம்கள் தங்களின் ஆடை, அலங்காரம், நடைமுறை, உணவுமுறை ஆகிய அனைத்திலும் மேற்கத்திய கலாச்சாரத்துடன் ஒப்பாகின்றனர். இவர்கள் வாழ்நாள் முழுவதும் முஸ்லிம்களின் பட்டியலில் இருந்தாலும் மரணிக்கும் சமயத்தில் அதன் பாதிப்புகள் வெளிப்பட்டு ஈமானே பிடுங்கப்படும் நிலையின் அபாயமுண்டு.

ஆக அல்லாஹ்வின் விரோதிகளின் கலாச்சாரத்துடன் ஒப்பாகுவதால் ஈமானே பறிபோகும் நிலை ஏற்படுகிறது.

எனவே, மாற்றார்களுக்கு ஒப்பாகுவதை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டும். இவ்விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உள்ளங்கள் ஒன்றுபடுவதினால் ஆடையும் ஒன்று படுகிறது. இது மிகவும் ஆபத்தான விஷயம் தவிர்ப்பது அவசியமாகும்.

## 14. அல்லாஹ்விடத்தில் அவமானம்

பாவங்களின் காரணமாக மனிதன் அல்லாஹ்விடம் மிகவும் கேவலமடைந்து விடுகிறான். உண்மையான பேரரசனான அல்லாஹ்வின் பார்வையில் தாழ்ந்து போவதும்,

கேவலமடைந்து விடுவதும் எவ்வளவு பெரிய தண்டனை! அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்.

وَمَنْ يُّهِنِ اللّٰهُ فَمَالَهٗ مِنْ مُّكْرِمٍ

மேலும் அல்லாஹ் யாரைத் தாழ்த்துகிறானோ, அவனுக்கு கண்ணியமளிப்பவர் எவருமிலர். (22:18) அல்லாஹ்வுடைய பிடி மிகவும் கடுமையானதாகும்.

## ஒரு உண்மை சம்பவம்

ஒரு அரசு அதிகாரி இருந்தார். அதிகம் இலஞ்சம் வாங்குவது இவரின் வழமை. ஒரு தடவை பள்ளிக்கு அருகிலேயே ஒரு வீட்டை வாங்கினார். ஃபஜ்ரில் முஅத்தின் (பாங்கு சொல்பவர்) பாங்கு சொன்ன போது மது மயக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த அவர் விழித்துவிட்டார். மிகவும் கோபத்துடன் அந்த முஅத்தினிடம் சென்று ''என் தூக்கமே கெட்டுவிட்டது. நாளையிலிருந்து மைக்கில் பாங்கு சொல்லக்கூடாது'' அதட்டிவிட்டு சென்று விட்டார்.

இவ்விஷயத்தை பள்ளிக்கு வந்த தொழுகையாளிகளிடம் சொன்ன போது அவர்கள் ''இதென்ன புதுவிஷயமாக இருக்கிறதே! அவருக்கு தூக்கம் வராவிட்டால் வேறு எங்கேனும் சென்று தூங்கச் சொல்லுங்கள். நீங்கள் மைக்கிலே தான் பாங்கு சொல்லனும்'' என்றனர். அடுத்தநாள் ஃபஜ்ரில் 'மைக்'கில் பாங்கு சொன்ன போது, கோபத்துடன் அவர்கள் எழுந்து வந்து முஅத்தினை முகத்தில் அறைந்துவிட்டார்.

இதனால் அல்லாஹ்வின் பிடி அவனை வந்தடைந்தது. அல்லாஹ் அவனை கேவலப்படுத்த நாடிவிட்டான். அவனுடைய பாதி உடலில் பக்கவாத நோய் வந்துவிட்டது. அவனுடைய பாதி உடலில் பக்காவத நோய் வந்துவிட்டது. அவனுடைய இரு கைகளும் நெஞ்சுடன் ஒட்டிக் கொண்டது.

எந்த வேலையும் செய்ய முடியாமல் வீட்டில் (வெட்டியாக) கிடந்தான். மருத்துவத்திற்கே அதிகம் செலவாகிவிட்டது. எனினும் அவனிடம் முரட்டு குணமிருந்ததால், வீட்டில் அற்ப விஷயத்திற்கெல்லாம் கூட வேலைக்காரனை பிள்ளைகளை, மனைவியை திட்டிக் கொண்டே இருப்பான்.

தினமும் இதே நிலை தொடர்ந்தது. பிள்ளைகள் வெறுத்துப் போய் தாயிடம் கூற, தாய் ஏதேனும் கூறினால் மீண்டும் திட்டு விழும். கெட்ட வார்த்தைகளை பயன்படுத்துவான். இப்படியே பலநாட்கள் அவனுக்கு பணிவிடை செய்துக்கொண்டும், அவனிடம் திட்டு வாங்கிக் கொண்டும் சகித்துக் கொண்டே இருந்தாள். கடைசியில் தாங்க முடியாமல் அவனை அப்படியே விட்டுவிட்டு தன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தாய் வீட்டிற்கு சென்றுவிட்டாள்.

மிகவும் அவதிப்பட்ட அவன் தன் சகோதரனுக்கு 'ஃபோன்' செய்து "என் மனைவி எனக்கு துரோகம் செய்துவிடடாள். என்னை கவனிக்க யாரும் இல்லை" என்றான். எனவே சகோதரன் அவனை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அங்கேனும் அமைதியாக இருந்தானா?! சகோதரனின் பிள்ளைகளை திட்ட ஆரம்பித்தான். அவனுடைய மனைவியையும் திட்டினான். பிள்ளைகள் வெறுத்துப் போய் "இந்த தொல்லையை இங்கு ஏன் அழைத்து வந்தீர்கள்?" என்று தந்தையிடம் கேட்டனர்.

சகோதரன் அவனிடம் "நீ ஏன் எல்லோரிடமும் கடிந்துக் கொள்கிறாய். தீய வார்த்தைகளை பயன்படுத்துகிறாய்" என்று கேட்டான். உடனே அவனையும் திட்ட ஆரம்பித்தான். இதைப்பார்த்த அந்த பிள்ளைகள் "நீ எங்களின் தந்தையை திட்டுகிறாயா?" என்று மனதில் கூறிக்கொண்டுஅடுத்த நாள் காலையில் அவனை தூக்கி வெளியே கொண்டு வந்து வீதியிலே போட்டுவிட்டார்கள்.

அச்சமயத்தில் அவன் உடலில் எஞ்சியிருந்த பாதி பகுதியிலும் வாதம் வந்துவிட்டது. அவனுடைய இருகால்களும் நெஞ்சுடன் ஒட்டிக் கொண்டது. கையையும், காலையும் அசைக்க முடியாமல் உயிருள்ள பிணமாக கிடந்தான். வெயில் காலமாக இருந்ததால் 9 மணி ஆனதும் தரை சூடாகிவிட்டது. வியர்வை கொட்டுகிறது. பசியும் தாகமும் ஏற்படுகிறது. இனி யாரிடமும் கேட்க முடியாத பட்சத்தில் அரசு அதிகாரியாக இருந்த அவன் மக்களிடம் ''அல்லாஹ்வின் பெயரால் ஏதேனும் பிச்சை போடுங்கள்'' என்று பிச்சை கேட்க ஆரம்பித்து விட்டான்.

ஒரு வாலிபன் அவன் மீது இரக்கப்பட்டு அவனுக்கு ஒரு ரொட்டி வாங்கிக் கொடுத்தான். ''இதை எனக்கு ஊட்டி விடு'' என்று அவன் கூறவே அந்த வாலிபன் ''எனக்கு நேரமில்லை'' என்று கூறி ரொட்டியை வைத்துவிட்டு சென்றுவிட்டான். இந்த ரொட்டியை அப்படியேவிட்டால் நாய் வந்து எடுத்துக் கொள்ளும் என்று பயந்த அவன், அந்த ரொட்டியை தன் வாயால் எடுத்து கொண்டான்.

கை விரல்களை அசைக்க முடியவில்லை. எனவே நெஞ்சோடு ஒட்டிக்கொண்டிருந்த அவனுடைய கால் விரல்களுக்கு மத்தியில் அந்த ரொட்டியை பிடித்து நாயை போன்று சாப்பிட்டான்.

وَمَنْ يُّهِنِ اللّٰهُ فَمَا لَهٗ مِنْ مُّكْرِمٍ

அல்லாஹ் யாரை கேவலப்படுத்தி விட்டானோ அவனை கண்ணியப்படுத்துவோர் யாருமில்லை. *(22:18)* என்று அல்லாஹ்வே கூறியது பொய்யாகாது.

யார் அல்லாஹ்வின் பார்வையில் தாழ்ந்து விடுவானோ அவனை மக்கள் உள்ளத்தால் கண்ணியப்படுத்துவதில்லை. தற்கால ஆட்சியாளர்களுக்கு கிடைக்கும் கண்ணியம்

உண்மையான கண்ணியமல்ல. இது குறிப்பிட்ட நேரம் வரைதான் . பதவி நீங்கி விட்டால் கண்ணியமும் நீங்கிவிடும்.

## 15. அறிவில் குறைவு

பாவங்களின் காரணமாக மனிதனின் அறிவும் கெட்டுவிடுகிறது. நல்ல முடிவை எடுப்பதில்லை. எது அவனுக்கு கெடுதியை விளைவிக்குமோ அதையே தேர்ந்தெடுப்பான். உதாரணமாக, சில பெண்கள் பர்தாவை விரும்புவதில்லை. பர்தாயில்லாமல் இருப்பது அவர்களுக்கு கேடு விளைவிக்கக் கூடியது என்பதையும் உணருவதில்லை. இதுவெல்லாம் பாவங்களால் ஏற்பட்ட விளைவுகளே.

ஆக, ஒருமுறை இப்படிப்பட்ட ஒரு பெண் நம் நாட்டின் சட்டசபைக்கு வந்தாள். அங்கு ஒரு ஆலிம் இருந்தார். அந்த பெண் அவரை அதிகம் தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தாள். அந்த ஆலிம் மக்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போது வேண்டுமென்றே அவருக்கு முன்னால் பர்தா இல்லாமல் வந்து ஸலாம் சொல்லி முஸாஃபஹா செய்ய கையை நீட்டுவாள். இது போன்ற செயல்களை அவள் அடிக்கடி செய்துக் கொண்டே இருந்தாள். இதனால் அவர் மிகவும் சங்கடமடைந்தார். எப்படியாவது இவளிடமிருந்து தப்பிக்க வேண்டுமென்று எண்ணினார்.

ஒரு முறை இதேப்போன்று அந்தப் பெண் மக்களுக்கு முன்னால் அவருக்கு ஸலாம் சொல்லி முஸாஃபஹா செய்ய கையை நீட்டிய போது, அவர் "முஸாஃபஹா வேண்டாம். (கட்டியணைத்தல்) முஆனகா செய்யலாமென்று எண்ணுகிறேன்" என்றார். உடனே அவள் ஓடி விட்டாள்.

இப்படி தனக்கு கேடுவிளைவிக்கும் முடிவுகளையே எடுப்பார்கள். இன்று பர்தா இல்லாத முஸ்லிம் பெண்களின் நிலை எப்படி இருக்கிறதென்பதை நாம் அனைவரும் நன்றாகவே அறிந்துள்ளோம்.

இன்னும் சொல்லப்போனால், பாவத்தின் காரணமாக மனிதன் இயல்புக்கு மாற்றமான முடிவுகளையும் எடுக்க ஆரம்பித்துவிடுகிறான். உதாரணமாக ஒரு ஆண் வேறு ஆணுடன் திருமணம் செய்வது இயற்கை அமைப்புக்கே மாற்றம். அறிவிற்கே புலப்படாத செயல். ஆனாலும் பாவங்களின் காரணமாக மனித அறிவு கெட்டு விட்டது.

## 16. சாபத்திற்குரியவனாக ஆகுதல்

பாவத்தின் காரணமாக மனிதன் மற்ற படைப்பினங்களின் சாபத்திற்குரியவனாக மாறிவிடுகிறான். ஏனெனில் பாவங்களின் காரணமாக அல்லாஹ்வின் அருட்கொடைகள் தடைபட்டு விடுகின்றன. மழையும் தடைபட்டு விடுகிறது. 'ரிஸ்க்' கில் குறைவு ஏற்பட்டு, பங்கமும் ஏற்படுகிறது. இந்த பாதிப்பை எல்லா படைப்பினங்களும் அனுபவிக்கிறது.

எனவே மற்ற படைப்பினங்களும் அல்லாஹ்வுக்கு மாறு செய்யும் அடியானைப்பார்த்து "உன்னால் தான் நாங்களும் பஞ்சத்தால் வாடுகிறோம்" என்று, அவனை சபிக்கின்றன. அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக! ஆமீன்...

### சாபம் யார் மீது?

பாவத்தின் காரணமாக மனிதன், ஈருலகத் தலைவர் நபிகள் பெருமானாரின் சாபத்திற்குரியவனாக மாறிவிடுகிறான். நபியவர்கள் சில பாவிகளை சபித்துள்ளார்கள். அவர்களில் சிலர் மற்ற பெண்களின் முடிகளை தன் முடியோடு சேர்த்துக் கொள்ளும் பெண். (அதாவது சவரி முடி வைப்பவள்). அதே போல் அலங்காரம் இன்னும் ஃபேஷன் என்ற பெயரில் தன்னை கண்காட்சி பொருளைப் போல் ஆக்குபவள்.

வட்டி வாங்குபவன், கொடுப்பவன், அதை எழுதுபவன், அதற்கு சாட்சியாக இருப்பவன் (வட்டியின் காரணமாக வீட்டில்

(பரகத்) அபிவிருத்தி இல்லாமலாகிவிடுகிறது. எத்தனையோ நபர்கள் வட்டியின் காரணமாக மிகவும் நஷ்டமடைந்துள்ளார்கள். பலர்கள் அழிந்துள்ளார்கள் என்பதை கண்கூடாக கண்டு வருகிறோம்.

எந்தளவு வட்டியை விட்டும் தவிர்ந்துக் கொள்கிறோமோ அந்தளவு நம் வாழ்கையில் சந்தோஷங்கள் இருக்கும். யார் வட்டி வாங்குவதை விட்டும் தவிர்ந்துக் கொள்ளவில்லையோ அவர்களைப் பற்றி அல்லாஹ் குர்ஆனில்

فَأْذَنُوا بِحَرْبٍ مِّنَ اللَّهِ وَرَسُولِهِ

அல்லாஹ்விடமும், அவனுடைய தூதரிடமும் போரிடுவதாகப் பிரகடனம் செய்துவிடுங்கள். (2:279) என்று கூறியுள்ளான். அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் போரிடுபவனின் கதி என்னவாகும்? என்பதை நீங்கள் யோசித்துக் கொள்ளுங்கள்.

எனவே தான் பெரியார்கள் "யாருக்காவது வட்டி பணம் கிடைத்தால், அதை பொது கழிப்பிடங்கள் கட்டப்படுமிடங்களுக்கு கொடுத்துவிடவேண்டும். மேலும் அதற்கான நன்மையை எதிர்பார்க்கக்கூடாது. காரணம் இது நன்மையை நாடி கொடுப்பதில்லை. மாறாக ஒரு கெடுதியை நம்மை விட்டும் தூரமாக்குவதாகும்" என்கின்றனர்.

தேவையின்றி உருவப்படங்கள் எடுப்பவன் (பாஸ்போர்ட், அடையாள அட்டை போன்ற நிர்பந்த தேவைகளுக்காக 'நிர்பந்தம்' என்ற அடிப்படையில் உருவப்படம் எடுப்பது கூடும் என்று உலமாக்கள் கூறியுள்ளனர்.

காரணம், இவை நாட்டின் குடியுரிமை மேலும் ஹஜ், உம்ரா போன்றவற்றிற்கு மிகவும் அவசியமானவையாகும். ஆனால் திருமணங்கள், உல்லாசப் பயணங்கள் இது போன்றவற்றில்

உருவப்படம் எடுப்பது ஹராமாகும். மேலும் எவ்வீட்டில் உருவப்படங்கள் உள்ளதோ அவ்வீட்டிற்கு ரஹ்மத்துடைய மலக்குகள்வருவதில்லை.)

கால வரையறையுடன் திருமணம் செய்பவன். (அதாவது நான் திருமணம் செய்து இத்தனை நாட்களிலேயே தலாக் சொல்லிவிடுவேன் என்ற நிபந்தனையுடன் திருமணம் செய்வது.)

ஒரு முஸ்லிமிடம் இரும்பை காட்டி அவனை தாக்கும் வண்ணம் சைக்கினை செய்பவன். (உதாரணமாக கத்தியை காட்டுவது, அம்பை காட்டுவது, துப்பாக்கியை காட்டுவது இப்படி வெரும் சைக்கினை செய்பவனையே நபியவர்கள் சபித்துள்ளார்களெனில், ஒருவர் ஒரு முஸ்லிமை காயப்படுத்திவிட்டாலோ அல்லது கொலை செய்து விட்டாலோ அல்லாஹ் அவன் மீது அடையும் அதிருப்தி இன்னும் கோபத்திற்கு அளவே இல்லை. எனவே தான் அல்லாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்

وَمَنْ يَقْتُلْ مُؤْمِنًا مُّتَعَمِّدًا فَجَزَآؤُهٗ جَهَنَّمُ

எவனொருவன் ஒரு இறைநம்பிக்கையாளனை வேண்டுமென்றே கொலை செய்தால் அவனுடைய கூலி நரகமேயாகும். (4:93)

இதுவே மிகப் பெரும் தண்டனையாக இருந்து அல்லாஹ் இத்துடன் விட்டுவிடவில்லை. அந்த ஆயத்தின் தொடரிலே خالدا فيها அந்த நரகத்திலே நிரந்தரமாக இருப்பான் و غضب الله عليه அல்லாஹ் அவன் மீது கோபம் கொள்வான் என்றும் கூறி و لعنه அல்லாஹ் அவனை சபிக்கிறான் و اعد لهم عذابا اليما அவர்களுக்கு நோவினை தரும் வேதனையை அல்லாஹ் தயார் படுத்தியுள்ளான் (4:93) என்றெல்லாம் கூறி அந்த ஆயத்தை

முடிக்கிறான். இந்தளவு எந்த பாவத்திற்கும் அல்லாஹ் கோபமடைந்ததில்லை. ஆனால் தற்காலத்தில் முஃமின்களை இரும்பால் தாக்குவதைப் போல் சைக்கினை செய்வது சர்வ சாதாரணமாகிவிட்டது.

மது குடிப்பவர், மற்றவரை குடிக்க வைப்பவர், அதை தயாரிப்பவர், அதை விற்பவர், வாங்குபவர், வேறு இடத்திற்கு சுமந்து செல்பவர் (மது அருந்துவது ஒரு தனிப்பட்ட ஒரு பாவமில்லை. மாறாக பாவங்களின் தலைவாயிலாகும். மிகப் பெரும் தீய பழக்கமாகும். பெரும்பாலும் மது அருந்தும் பழக்கம் தீய நண்பர்களுடைய சகவாசத்தில் தான் ஏற்படும். ஒரு முறை சுவைத்துப்பார்! என்று தான் கூறுவார்கள். அவ்வளவு தான் அத்துடன் அவன் வாழ்க்கையே நாசமாகிவிடும்.

எனவே தான் 'லைலத்துல் கத்ர்' இரவில் பெரும் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டாலும் மது அருந்துபவன் தவ்பா செய்யாதவரை அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படாது. மற்ற போதை தரும் பொருட்களுக்கும் மதுவிற்குரிய சட்டமே.

தந்தையிடம் தவறாக பேசுபவன். இன்னும் கோபத்தால் தந்தையை திட்டுபவன்.தேவையில்லாமல் ஒரு உயிரை கொல்பவன். இன்னும் அல்லாஹ் அல்லாத மற்றவரின் பெயரால் பிராணியை அறுப்பவன்.பெண்களுக்கு ஒப்பாகும் ஆண்கள். ஆண்களுக்கு ஒப்பாகும் பெண்கள்.

மார்க்கத்தில் (இல்லாத) புதிய விஷயத்தை (பித்அத்தை) உண்டாக்குபவன். மனைவியுடன் தவறான முறையில் சேருபவன். (அதாவது பின்புறமாக வீடு கூடுபவன்). ஓரினச் சேர்கை செய்பவன். மேலும் மிருகங்களுடன் சேருபவன். முஸ்லிம்களுக்கு மோசடி செய்பவன், ஏமாற்றுபவன். கப்ருகளுக்குச் சென்று ஸஜ்தா செய்து, விளக்கு ஏற்றி சடங்குகள் செய்யும் பெண்கள். தன் கணவனுடன் கோபித்துக் கொண்டு

தனியாக தூங்கும் மனைவி. அப்பெண் தன் கணவனிடம் வரும்வரை மலக்குகள் அவனை சபித்துக் கொண்டே இருப்பார்கள்.

(தற்காலத்தில் பெண்களுக்கு சட்டம் தெரியாததால் இந்த செயலை சாதாரணமாக செய்து விடுகிறார்கள். சிறிய விஷயத்திற்காக கோபித்துக் கொண்டு தனியாக தூங்கி தன் காரியம் நிறைவேறாத வரை கணவன் கூப்பிடாமல் செல்லாமல் இருந்தும் தன் காரியத்தை கணவனிடமிருந்து செயல்படுத்திய பின்பே கணவனிடம் செல்வது. இதுவெல்லாம் பெரும் பாவங்களில் கட்டுப்பட்டது. மலக்குகளின் சாபம் அப்பெண்மீது ஏற்படுகிறது.

(மிகவும் முக்கியமான விஷயம்) கணவன் மனைவிக்கு மத்தியில் பிரிவினை ஏற்படுத்துபவன், கணவனுக்கெதிராக மனைவியை தூண்டி விடுபவன். அதேப் போல் எஜமானுக் கெதிராக வேலையாளை தூண்டி விடுபவன். (இந்த பாவம் இப்போது பரவலாகிவிட்டது. பெரும் செல்வந்தர்களெல்லாம் இதில் கூட்டாகிவிடுகின்றனர். மருமகனை பிடிக்காவிட்டால் போதும்! மகள் அவனுடன் சேர்ந்து வாழ விரும்பினாலும், அவளின் தாய், தந்தை, சகோதர சகோதரிகள் அனைவரும் சேர்ந்து அவனை விட்டுவிடும்படி தூண்டுகின்றனர்.

இப்படி யாரேனும் கணவன், மனைவிக்கு மத்தியில் பிரிவினை ஏற்படும் விதத்தில் கணவனிடமோ அல்லது மனைவியிடமோ ஏதேனும் விஷயத்தை கூறினால் அவர் மீது நபியவர்களின் சாபம் உண்டாகும். ஆனால் தற்காலத்தில் இவ்விஷயத்தை ஒரு பாவமாகவே கருதுவதில்லை.

அல்லாஹ் கணவன் மனைவி இருவரும் சேர்ந்திருப்பதையே விரும்புகிறான். பொய் சொல்வது பெரும் பாவங்களில் கட்டுப்பட்டது. அப்படியிருந்தும் யாரேனும் ஒருவர் கணவன், மனைவி சேர்ந்து வாழ்வதற்காக ஒரு ‘பொய்’ கூறினால் அந்த பொய்யை அல்லாஹ் மன்னித்து விடுகிறான்.

ஆக கணவன், மனைவி சேர்ந்து வாழ வேண்டுமென்பதற்காக அல்லாஹ் தன் உரிமையையே விட்டுக் கொடுத்து, மன்னித்துவிடுகிறான். அப்படியிருக்க அந்த கணவன், மனைவியை பிரித்து வைப்பதற்கு நாம் யார்? நமக்கென்ன உரிமை இருக்கிறது?!

பூமியில் குழப்பம் விளைவிப்பவர்கள். ஸஹாபாக்களைப் பற்றி தவறாக பேசுபவர்கள். முஸ்லிம்களுக்கெதிராக செயல்படும் காஃபிர்களுக்கு உதவி செய்யும் முஸ்லிம். நல்லவர்கள் மீது இட்டுக்கட்டுபவர். சொந்த பந்தத்தை துண்டித்து வாழ்பவன். (சாதாரண விஷயத்திற்காக நான் என் சகோதரனிடம் பேச மாட்டேன், சிறிய தந்தையிடம் பேசமாட்டேன், இவரிடம் பேசமாட்டேன், அவரிடம் பேச மாட்டேன் என்று சொல்வது. இதைப்பற்றி அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

وَيَقْطَعُوْنَ مَآ اَمَرَ اللّٰهُ بِهٖٓ اَنْ يُّوْصَلَ

மேலும், அவர்கள் எதனை (எந்த உறவு முறைகளை) இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டானோ அதை துண்டித்துவிடுகின்றனர். (2:27)

எந்த உறவு முறைகளை இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளானோ அவற்றை முறிப்பவர்கள்.

அதாவது எந்த உறவினர்களுடன் சேர்ந்து வாழும் படி அல்லாஹ் கட்டளையிட்டானோ அ(ப்படிப்பட்ட)வர்களை துண்டித்து வாழ்பவர்களை நபியவர்கள் சபித்துள்ளார்கள்.

ஆக நம்மில் ஒருவர் இவற்றில் ஏதேனுமொரு பாவத்தை செய்து விட்டாலும் அவர் மீது நபியவர்களின் சாபம் ஏற்படும். இது பாவங்களால் ஏற்படும் பெரும் பாதிப்பாகும்.

## 17. மலக்குகளின் துஆவை விட்டும் தடுக்கப்படுதல்

*பாவத்தின் பாதிப்புகளில் அடுத்து, மனிதன் பாவங்களின் காரணமாக மலக்குகளின் துஆவை விட்டும் தடுக்கப்படுகிறான். மலக்குகள் நபியவர்களின் உம்மத்திற்காக எந்நேரமும் துஆ செய்து கொண்டே இருக்கிறார்கள். இதைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்.*

وَيَسْتَغْفِرُونَ لِلَّذِينَ آمَنُوا

*இன்னும் (ஓரிறை) நம்பிக்கை கொண்டவர்களுக்காகப் பாவமன்னிப்பும் தேடுகின்றனர் (40:7).*

فَاغْفِرْ لِلَّذِينَ تَابُوا

*எனவே பாவமன்னிப்பு கோரி, உன்னுடைய வழியைப் பின்பற்றியவர்களை நீ மன்னிப்பாயாக! (40:7) என்று துஆ செய்கின்றனர்.*

*ஆக பாவம் செய்பவன் தவ்பா செய்யாவிட்டால் இந்த மலக்குகளின் துஆவை விட்டும் வெளியேறிவிடுவான். அவனுக்கு இந்த துஆ கிடைக்காது.*

## 18. விளைச்சலில் குறைவு

*பாவங்களின் காரணமாக விளைச்சலில் குறைவு ஏற்பட்டுவிடும். அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.*

ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ بِمَا كَسَبَتْ أَيْدِي النَّاسِ

*மனிதர்களுடைய கைகள் சம்பாதித்த (கெடுதலான)வற்றின் காரணத்தால் தரையிலும், கடலிலும் (அழிவு) குழப்பம் பரவிவிட்டது. (30:41)*

அதாவது கடலிலும் நிலத்திலும் என்னென்ன குழப்பங்கள், கெடுதிகள் ஏற்படுகின்றனவோ அவையெல்லாம் மக்களின் பாவங்களின் காரணமாகவே ஏற்படுகின்றன. ஈஸா (அலை) அவர்கள் எப்போது உலகிற்கு அனுப்பப்படுவார்களோ அப்போது ஒரு நேரம் வரும். அச்சமயம் உலகில் அல்லாஹ்வை நிராகரிப்பவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்.

ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. அக்காலத்தில் எந்தளவு பரக்கத் இருக்குமெனில், ஒரு பசுவில் கறக்கப்படும் பால் ஒரு (பெரிய) குடும்பத்திற்கு போதுமானதாக இருக்கும். வேறொரு அறிவிப்பில் வருகிறது. ஒரு மாதுளை பழம் ஒரு பெரும் கூட்டத்தின் பசியை தீர்த்துவிடும். இன்னும் சிலர் கூறுகின்றனர். ஒரு திராட்சை குலையை ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமெனில், ஒட்டகத்தின் மீது வைத்தால் தான் முடியும் அந்தளவு அது பெரியதாக இருக்கும்.

## ஒரு அரசனின் தீய எண்ணம்

ஒரு அரசர் பயணம் செய்துவிட்டு திரும்பி வந்துக் கொண்டிருந்தார். காட்டுப் பகுதியாக இருந்தது. அவருக்கு கடும் தாகம் ஏற்பட்டது. அருகில் ஒரு மாதுளைப் பழத் தோட்டம் இருந்தது.

அந்த தோட்டக்காரனிடம் சென்று "எனக்கு கடும் தாகம் ஏற்பட்டுள்ளது. குடிப்பதற்கு ஏதேனும் கொடுங்கள்" என்று கேட்டார். அந்த தோட்டக்காரன் ஒரு மாதுளை பழத்தை எடுத்து பிழிந்தான். அது ஒரு டம்ளர் நிரம்ப வந்தது.

அதை அரசரிடம் கொடுத்தான். அதை குடித்ததும் அரசர் அளவுகடந்த மகிழ்வடைந்துவிட்டார். "மிகவும் சுவையாக உள்ளது. இன்னொரு டம்ளர் கொடு" என்று தோட்டக்காரனிடம் கேட்டார். அந்நேரத்தில் அரசரின் உள்ளத்தில் "இவ்வளவு சுவையான மாதுளைப்பழ தோட்டம் என் கை வசத்திலல்லவா

இருக்க வேண்டும்'' என்ற எண்ணம் வந்தது. இப்போது அந்த தோட்டக்காரன் ஒரு பழத்தை பிழிந்தும் டம்ளர் நிரம்பவில்லை.

3 பழங்கள் பிழிந்த பின்பே டம்ளர் நிரம்பியது. அதை அரசரிடம் கொடுக்க, அவர் குடித்தார். ஆனால் முன்பிருந்த சுவை இப்போது இல்லை. ''இது வேறு மரத்தின் பழங்களா?'' என்று கேட்டார். தோட்டக்காரன் ''இல்லை. அதே மரத்தின் பழங்கள்தான்'' என்று பதிலளித்தார்.

அதற்கு அரசர் இல்லை இல்லை. முதலில் பிழியும் போது ஒரு பழத்திலேயே டம்ளர் நிரம்பிவிட்டது. அது சுவையாகவும் இருந்தது. ஆனால் இந்த தடவை 3 பழங்களால் தான் டம்ளர் நிரம்பியது. சுவையும் குறைவாகவே உள்ளது.

இரண்டு பழங்களுக்கும் ஏதோ வித்தியாசம் உள்ளது'' என்று கூறினார். அதற்கு தோட்டக்காரன் ''பழங்களில் எந்த மாற்றமும் இல்லை. அரசரின் எண்ணத்தில் தான் ஏதோ மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் பரக்கத் இல்லாமல் போய்விட்டது என்று பதிலளித்தான். இதைக் கேட்ட அரசர் உடனே தன் தீய எண்ணத்தை மாற்றிக் கொண்டு அல்லாஹ்விடம் தவ்பா செய்தார்.

ஒரேயொமுறை கெட்ட எண்ணம் கொண்டதற்கே இந்தளவு பரக்கத்தின்மை ஏற்பட்டுவிட்ட தென்றால் வாழ்க்கை முழுவது ஒருவர் மற்றவர் மீது தீய எண்ணம் கொண்டால் வீட்டில் எப்படி பரக்கத்துகள் வரும்? என்பதை சிந்தித்து உணர வேண்டும்.

## 19. வெட்கம், மாணம் நீங்கிவிடுதல்

பாவங்களின் காரணமாக மனிதனிடமிருந்து வெட்கமும், மானமும் நீங்கி விடுகிறது. இன்று எத்தனையோ பெற்றோர்கள் தம் பிள்ளைகளை அருகில் அமர வைத்து டி.வி. பார்க்கிறார்கள். ஒரு சிறுவன் ''நாங்கள் எங்கள் பெற்றோருடன் டி.வி.

பார்ப்போம். அதில் ஏதேனும் ஆபாச காட்சிகள் வந்துவிட்டால் தாய் எங்களிடம் கண்களை மூடிக் கொள்ளும் படி கூறுவாள்.

நாங்கள் தாய்க்கு கட்டுப்படுவதற்காக சிறிது நேரம் கண்களை மூடுவோம். பின்பு நாங்களும் அந்த காட்சிகளை பார்ப்போம்'' என்று கூறுகிறான். ஆக எவ்விடத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் அமர்ந்து அசிங்கமான காட்சிகளை பார்ப்பார்களோ அங்கு வெட்கமும், மானமும் கப்பல் ஏறத்தானே செய்யும்.

எனவேதான் மேற்கத்திய நாடுகளில் ''வெட்கமும், மானமும் ஒரு நோய்'' என்று சொல்லப்படுகிறது. அவர்களின் இந்த சொல்படி வெட்கமில்லாதவரே அவர்களிடம் மிகவும் நல்லவர். இதுவெல்லாம் பாவங்களின் வெளிபாடே. இப்படிப்பட்டவர்களை ''வெட்கமற்ற கூட்டம்'' என்று தாராளமாக சொல்லலாம்.

காரணம் الحياء شعبة من الايمان இஸ்லாத்தில் வெட்கமென்பது ஈமானின் ஒரு பகுதியாகும் என்று நபியவர்கள் கூறியுள்ளார்கள்.

## 20. அல்லாஹ்வின் கண்ணியம் நீங்குதல்

பாவங்களின் காரணமாக அல்லாஹ்வின் கண்ணியம் உள்ளத்திலிருந்து நீங்கிவிடுகிறது. அடிக்கடி பாவங்கள் செய்வதினால் அல்லாஹ்வுடைய பயம், கண்ணியம் அறவே இல்லாமலாகிவிடுகிறது. மிகவும் வேதனைக்குரிய விஷயம்.

## 21. பிரச்சனைகள் சூழ்ந்து விடுதல்

பாவங்களின் காரணமாக மனிதனை பல பிரச்சனைகள் சூழ்ந்து கொள்கின்றன. ஒவ்வொரு பிரச்சனைகளும் நீங்கும் போது அடுத்தடுத்த பிரச்சனைகள் வந்துக் கொண்டே இருக்கும்.

தஸ்பீஹ் மணி அறுந்து அதிலிருந்து மணிகள் ஒன்றன் பின் ஒன்றாக உதிர்ந்து விழுவதைப் போல் பிரச்சனைகள் தொடர்ந்து வந்துக் கொண்டே இருக்கும். எனவே தான் அல்லாஹ் குர்ஆனில்

وَمَآ اَصَابَكُمْ مِّنْ مُّصِيْبَةٍ فَبِمَا كَسَبَتْ اَيْدِيْكُمْ

துன்பத்திலிருந்து உங்களுக்கு ஏதாவது ஏற்படுமாயின் (அது) உங்களுடைய கரங்கள் சம்பாதித்துக் கொண்ட (தீய)வற்றினாலேயாகும். *(42:30)* என்று கூறியுள்ளான். சில சமயம் 'அல்லாஹ் செய்யும் சோதனை' என்ற அடிப்படையில் பிரச்சனைகள் வரலாம். அதில் மனிதனுக்கு இழிவு ஏற்படுவதில்லை. எந்த பிரச்சனைகளினால் மனிதனுக்கு இழிவு ஏற்படுமோ அதுவே பாவங்களினால் ஏற்படும் பாதிப்புகளாகும்.

## 22. கெட்ட பெயர்கள் இடப்படும்

*பாவங்களின் காரணமாக மோசமான பெயர்களும் இடப்படும். நன்மையின் காரணமாக நல்ல பெயர்களும் அல்லாஹ்விடம் அவனுக்கு கிடைக்கும். உதாரணமாக :* مؤمن *(இறைநம்பிக்கையாளன்)* مطيع *(வழிபடுபவன்)* منيب *(இறைவனின் பால் மீளுபவன்)* ولي *(இறைநேசர்)* عابد *(வணக்கசாலி)* عارف *(இறைவனை அறிந்தவன்)* صابر *(பொறுமையாளன்)* شاكر *(நன்றி செலுத்துபவவன்) போன்ற நல்ல பெயர்கள் அவனுக்கு கிடைக்கும்.*

*யார் பாவங்களில் ஈடுபடுவாரோ அவருக்கு அல்லாஹ்விடம்* عاصي *(தவறு செய்பவன்)* فاسق *(பாவி)* فاجر *(குற்றமிழைத்தவன்)* خبيث *(குழப்பவாதி)* مفسد *(மோசடிக்காரன்)* كاذب *(பொய்யன்)* خائن *(மோசடிக்காரன்)* متكبر *(பெருமையடிப்பவன்)* ظالم *(அநியாயக்காரன்) போன்ற மோசமான பட்டப்பெயர்கள் கிடைக்கும். இவை குர்ஆனில் பாவிகளுக்காக உபயோகிக்கப்பட்ட பெயர்களாகும்.*

## 23. ஷைத்தானை சாட்டப்படும்

பாவங்களின் காரணமாக அந்த மனிதன் மீது ஷைத்தான் சாட்டப்படுகிறான். அதனால் அவன் எந்நேரமும் கெட்ட விஷயங்களையே சிந்தித்துக் கொண்டிருப்பான். ஷைத்தான் அவனுடன் ஒட்டிக் கொண்டே இருப்பான். குர்ஆனில் வருகிறது

اِسْتَحْوَذَ عَلَيْهِمُ الشَّيْطٰنُ فَاَنْسٰىهُمْ ذِكْرَ اللّٰهِ

ஷைத்தான் அவர்கள் மீது மிகைத்துவிட்டான்; ஆகவே, அல்லாஹ்வைப் பற்றிய நினைவை அவர்களுக்கு மறக்கச் செய்துவிட்டான்;

وَمَنْ يَّعْشُ عَنْ ذِكْرِ الرَّحْمٰنِ نُقَيِّضْ لَهٗ شَيْطٰنًا فَهُوَ لَهٗ قَرِيْنٌ

எவர் அளவற்ற அருளாளனை நினைவு கூர்வதை விட்டும் (கண்ணை மூடிப்) புறக்கணித்துவிடுகிறாரோ, அவருக்கு ஷைத்தானை நாம் நியமித்திடுவோம்; அவன் அவருக்கு நெருங்கிய நண்பனாக இருப்பான் *(58:19)*

இப்படி வாழ்நாள் முழுவதும் ஷைத்தான் நண்பனைப் போல் ஒட்டிக் கொண்டே இருந்தால் மரண நேரத்தில் நிலை என்னவாகும்? மரண நேரத்திலோ ஷைத்தான் அவனை நரகில் சேர்ப்பதற்காக தன் முழு முயற்சியையும் செலவிடுகிறான்.

## 24. மன நிம்மதி சென்றுவிடும்

பாவங்களின் காரணமாக மன நிம்மதி, மன அமைதி இல்லாமலாகிவிடும். அவரிடம் செல்வம், செல்வாக்கு இருக்கும். பெரிய உத்தியோகஸ்தராக இருப்பார். எல்லாம் அவரிடம் இருந்தும் மன நிம்மதி இருக்காது. பாவங்களின்

காரணமாக அல்லாஹ் அவன் உள்ளத்திலிருந்து நிம்மதியை எடுத்து விடுகிறான்.

## 25. பெரும் பாவங்களை தொடர்ந்து செய்தல்

சிறு பாவங்களின் காரணமாக, மனிதன் பெரும் பாவங்களையும் அடிக்கடி செய்ய துணிந்து அல்லாஹ்வின் அருளை விட்டும் பின்தங்கி விடுகிறான். அவனுடைய உள்ளத்தில் ''நான் இன்ன பாவத்தை செய்தபின் தொழுதுவிட்டால் அல்லாஹ் அந்த பாவத்தை மன்னித்து விடுவான்'' என்ற எண்ணம் வந்துவிடுகிறது.

தவ்பாவும் செய்வதில்லை. தவ்பா செய்யாமலேயே மன்னித்து விட அல்லாஹ்வுக்கு என்ன தேவை இருக்கிறது? பாவத்திற்கு தவ்பா செய்யாவிட்டால் அதற்கான தண்டனை தான் அல்லாஹ் கொடுப்பான்.

## 26. கலிமா சொல்வதை விட்டும் தடுக்கப்படுதல்

அடிக்கடி பாவங்கள் செய்வதினால் மரண நேரத்தில் கலிமா சொல்வது சிரமமாகி விடுகிறது.

பாகிஸ்தானில் ஒரு டாக்டர் இருந்தார். அவர்கள் ''மரண வினாடிகள்'' என்ற நூலை எழுதினார். அவருக்கு ஜமாஅத்திலும் ஈடுபாடு இருந்தது. மிகவும் நல்ல மனிதர். அவர்கள் ஒரு பெரிய மருத்துவமனையில் முக்கியமான டாக்டராக இருந்தார். அவர் சுமார் 100 நபர்களின் மரண நேரத்தில் உடனிருந்திருக்கிறார். அவர் கண் கூடாக பார்த்த சில விஷயங்களை கூறுகிறார்.

''நான் எத்தனையோ நபர்களுக்கு மரண நேரத்தில் கலிமா சொல்லிக் கொடுத்தேன். ஆனால் அவர்களால் கலிமா செல்வதே முடியவில்லை. நான் அவர்களிடம் ''நீங்கள் ஏன் கலிமா சொல்வதில்லை'' என்று கேட்க, ஒரு சிலர் ''எங்களின் நாவு வாதம் பிடித்ததைப் போன்று ஆகிவிட்டது. நாங்கள் கலிமா

சொல்ல நினைக்கிறோம். ஆனால் எங்கள் நாவு இப்போது எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. இந்த நாவால் நாங்கள் கலிமா சொல்லும் தகுதியை இழந்துவிட்டோம்'' என்றனர். அந்த 100 நபர்களில் ஒரு சிலரே கலிமா சொன்னார்கள். மற்ற அனைவரும் கலிமா சொல்லாமலேயே மரணித்து விட்டனர்.

ஒரு கிராமவாசிக்கு கலிமா சொல்லிக் கொடுத்த போது அவன் ''என் மாட்டுக்கு தீனி போட்டீர்களா? இல்லையா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான். ஒரு காய்கறி வியாபாரியிடம் கலிமா சொல்லும் படி கூறிய போது அவர்கள் ''உருளைக் கிழங்கு, வெங்காயம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இப்படி கலிமா சொல்வதற்கு பதிலாக அவர்கள் உலகில் என்ன செய்து கொண்டிருந்தார்களோ அதையே மரண நேரத்திலும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இது எவ்வளவு பெரும் கைசேதம். இது பெரும் பாவங்களை அடிக்கடி செய்வதால் ஏற்படும் விளைவுகளாகும். இதனால் கடைசி நேரத்தில் ஈமானே பிடுங்கப்படும் அபாயம் உள்ளது.

மார்க்கத்தில் உள்ள முஸ்தஹப்பு (விரும்ப தக்க செயல்)களை நல்ல முறையில் செய்து வந்தால் சுன்னத்துகள் பாதுகாக்கப்படும். வாஜிபுகளை,சுன்னத்துகளை பேணி செய்து வந்தால் இலகுவாக நிறைவேற்றி விடலாம். வாஜிபுகளை பேணி செய்து வந்தால் ஃபர்ளுகளை இலகுவாக நிறைவேற்றி விடலாம்.

## ஒரு நுணுக்கமான விஷயம்

நண்பர்களே! நுணுக்கமான ஒரு விஷயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் நமது நிலையை சிந்திக்க வேண்டும். நல்ல நிலையில் முழு தெளிவுடன் இருக்கும் போதே ஷைத்தான் நம்மை எளிதாக கெடுத்து விடுகிறான். அப்படி இருக்க மரண நேரத்திலோ முழு தெளிவும் முழு உணர்வும் இருக்காது. அச்சமயம் நம் நிலை என்னவாகும்.

அது மட்டுமில்லாமல் அந்நேரத்தில் தான் ஷைத்தான் தன் முழு முயற்சியையும் பயன்படுத்துவான். எனவே நல்ல முடிவைப்பற்றிய கவலை, உயர்ந்த கவலையாகும். எல்லா நேரங்களிலும் நல்ல முடிவிற்கான சிந்தனையிலேயே இருக்க வேண்டும். நாம் கடைசி நேரத்தில் கலிமாவை மொழிந்து மரணிக்க வேண்டுமென்று அதிகமாக நாம் துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்.

இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்கள் மிகப் பெரும் ஆலிமாக இருந்தாரக்ள். அவர்களின் மரணத்தருவாயில் அவர்களின் மாணவர்கள் கலிமா சொல்லிக் கொடுத்தார்கள். ஆனால் இமாமவர்களோ ( لا – لا ) இல்லை இல்லை என்று சொல்லிக்கொண்டிருந்தாரகள்.

சிறிது நேரத்திற்குப்பின் இமாமவர்களுக்கு தெளிவு ஏற்பட்டதும் மாணவர்கள் அவர்களிடம் "நீங்கள் ஏன் இல்லை, இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தீர்கள்" என்று கேட்டதற்கு இமாமவர்கள் "அப்போது ஷைத்தான் என்னிடம் வந்து "அஹ்மதே! நீங்கள் உலகில் ஈமானை பாதுகாத்தக் கொண்டாய்" என்று கூறினான்.

அதற்கு நான் அவனிடம் இல்லை இல்லை என் உடலிலிருந்து கடைசி மூச்சி பிரியும் வரை நான் உன் சூழ்ச்சிகளை விட்டும் நிம்மதி பெறமாட்டேன்" என்று கூறிக் கொண்டிருந்தேன் என்று பதிலளித்தார்கள். அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் எவ்வளவு பெரிய இமாமென்றால் இவர்களைப் பற்றி ஷைகுல் ஹதீஸ் (ரஹ்) அவர்கள் இமாம் அஹ்மதுப்னு ஹம்பல் (ரஹ்) அவர்களுக்கு 100 தடவை கனவில் அல்லாஹ்வை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது என்று எழுதியுள்ளார்கள்.

மேலும் இமாமவர்கள் ஹதீஸ் கலையில் மாபெரும் வல்லுநராகவும், மார்க்க சட்ட நிபுணராகவும் திகழ்ந்தார்கள்.

குர்ஆனுக்காக மிகப் பெரும் தியாகங்கள் செய்துள்ளார்கள். அது போன்ற தியாகங்கள் செய்துள்ளார்கள். அது போன்ற தியாகங்கள் செய்தவர்களை வரலாற்றில் எங்குமே காணமுடியாது.

இப்படிப்பட்ட, பேணுதல் நிறைந்த இமாமையே ஷைத்தான் மரண நேரத்தில் வழி கெடுக்க முயற்சி செய்தானென்றால், நண்பர்களே! நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய மரண நேரத்தில் நிலை எப்படி இருக்கும்? இது சாதாரண விஷயமல்ல. அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேட வேண்டும். அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

## நன்மையின் பிரதி பலன்

நன்மைகள் செய்தால் அல்லாஹ்வின் அருள் கிடைக்கும். உதாரணமாக யார் பேணுதலுடன் தொடர்ந்து மிஸ்வாக் செய்து வருவாரோ அவரைப் பற்றி ஹதீஸ்களில் வருகிறது. அந்த நபர் மீது பரக்கத் ஏற்படுகிறது. மரண சமயத்தில் உயிர் வாங்கும் மலக்கு வந்து, ஷைத்தானை அந்த நபரை விட்டும் விரட்டி விட்டு, அவருக்கு கலிமாவை நினைவுபடுத்துவார். அவர்கள் உயிர் பிரிவதற்கு முன்பே அவர் கலிமாவைச் சொல்லி விட வேண்டுமென்பதற்காக அந்த மலக்கு இவ்வாறு செய்வார்.

பெரியார்கள் ''யார் வாழ்நாளில் அதிகமான நேரம் உளூவுடன் இருப்பதற்கு முயற்சி செய்வாரோ அதன் பரக்கத்தால் அல்லாஹ் அவருக்கு மரண நேரத்தில் கலிமா சொல்லும் பாக்கியத்தை தருகிறான். இது எங்களின் அனுபவப் பூர்வமான விஷயம்'' என்று கூறியுள்ளனர்.

## மௌலானா அஹ்மது அலி [ரஹ்]

ஹள்ரத் அவர்கள் கூறுவார்கள் ''ஒரு அடியான் எவ்வளவு முக்கியமான வேலையில் ஈடுபட்டிருந்தாலும் பாங்கு சப்தத்தை கேட்டவுடன் அல்லாஹ்வுடைய பெயரின் கண்ணியத்தைக்

கருதி அவர்கள் அந்த வேலையை விட்டு விட்டு பாங்குக்கு பதில் கூறி சுன்னத்தான பாங்கு துஆ ஓதினால் அல்லாஹ் அந்த அடியானுக்காக கலிமாவுடன் மரணிக்கும் பாக்கியத்தை தருகிறான். இதை நான் கண்கூடாகவே பார்த்துள்ளேன்.

من كان اخر كلامه لا الـــه الا الله دخـــل الجنـــة

யாருடைய கடைசி வார்த்தை லாஇலாஹ இல்லல்லாஹ் என்றிருக்குமோ அவர் சுவனம் நுழைவார் என்பது நபியவர்களின் பொன்மொழியாகும்.

எனவே நாம் தனிமையில் அல்லாஹ்வுடைய முன்னிலையில் ஆஜராகி நம் கைகளை ஏந்தி அல்லாஹ்விடம் யா அல்லாஹ்! எங்களின் கடைசி (மரண) நேரத்தில் ஷைத்தானுக்கெதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக! ஈமானுடன் மரணிக்கும் பாக்கியத்தை தருவாயாக! என்று அதிகமாக துஆ கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

ஆக பாவங்களின் மோசமான விளைவு கலிமாவை விட்டும் தடுக்கப்படுதலாகும். கிதாபுகளிலே எழுதப்பட்டுள்ளது. இந்த கெட்ட விளைவு மரண நேரத்தில் தாயின் ரூபத்திலோ, தந்தையின் ரூபத்திலோ, நண்பரின் ரூபத்திலோ அல்லது யாருடன் அவனுக்கு அதிக தொடர்பு இருந்ததோ அவரின் ரூபத்திலோ அவனுக்கு முன்னால் தோன்றி உலகத்தில் நான் தான் உனக்கு அதிகமான உபகாரங்கள் செய்தேன் என்பதைப் போன்ற வார்த்தைகளை கூறி அல்லாஹ்வைப் பற்றியும், தீனைப் பற்றியும் சந்தேகத்தை ஏற்படுத்திவிடுகிறது.

இதனால் அவன் ஈமானையே இழந்து விடுகிறான். எனவே இந்நிலையை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டுமெனில் முதலில் பெரும் பாவங்களை விட்டும் உண்மையான முறையில் தவ்பா செய்வது மிகவும் அவசியமானதாகும்.


ஏனெனில் உலகில் ஒருவருக்கு நஷ்டம் ஏற்பட்டாலே அவர் தன் பாவங்களை விட்டும் தவ்பா செய்திருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது என்று நாம் சொல்வதுண்டு. இவையெல்லாம் உலகில் ஏற்படும் தண்டனைகளே. மறுமை தண்டனை இதைவிட பெரியதாகும். இதையே அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்.

كَذٰلِكَ الْعَذَابُ ۚ وَلَعَذَابُ الْاٰخِرَةِ اَكْبَرُ

வேதனை இவ்வாறு தான் (வரும்). மறுமை வேதனையோ மிகப் பெரியதாகும். *(68:33)* என்று கூறுகிறான்.

உலகில் ஏற்படும் தண்டனையைப் பார்த்தே "அவன் பெரும் பாவங்களை விட்டும் தவ்பா செய்திருக்க வேண்டும்" என்று கூறுகிறோம். இதை விடவும் பெரிய தண்டனையான மறுமை தண்டனையை விட்டும் தப்பிக்க யாருக்கு ஆசை இருக்கிறதோ அவர் கண்டிப்பாக தவ்பா செய்தே ஆக வேண்டும்.

நாம் பாவங்களை விட்டும் தவிர்ந்திருக்க அல்லாஹுதஆலா நல்லுதவி புரிவானாக! மேலும் நம்முடைய மரண நேரத்தில் கலிமா சொல்லும் பாக்கியத்தை தருவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.



எத்தனையோ செல்வந்தர்கள் விரும்பியதை உண்கின்றனர்.

விரும்பிய வசதிகளுடன் படுக்கின்றனர்.

ஆனாலும் அவர்கள் ஏன் தூக்கமாத்திரை சாப்பிடும் இழிநிலைக்குதள்ளப்பட்டுள்ளனர்?

தமது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சந்தோஷமும் மன அமைதியும் கிடைத்து விடுமென்றால் இவர்கள்தான் உலகிலேயே பெரும் பாக்கியசாலிகளாக இருந்திருப்பார்கள். மாறாக, இவர்களே கஷ்டத்திலும், மன அழுத்தத்திலும் சிக்குண்டவர்களாக இருக்கிறார்கள். இதிலிருந்து பாவத்தின் பாதிப்புகளை நாம் விளங்கிக் கொள்ளலாம். பாவம் செய்பவர் அதன் பாதிப்பிலிருந்து தப்பவே முடியாது. பாவமும் அதன் பாதிப்புகளும் (நெருப்பையும் அதன் உஷ்ணத்தையும் போன்று) பிரிக்க முடியாதது.

ஹள்ரத் மொலானா
பீர் துல்ஃபிகார் அஹ்மத் சாஹிப்
தாமத் பரகாதுஹும்

DARUL
MARASHID